நான் முதல்வன்

உலகை வெல்லும் இளைய தமிழகம்

மலர்:1 இதழ் 4 மார்ச் 2024 (தனிச்சுற்றுக்கு மட்டும்)

# கல்லூரிக் கனவு



தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

1 General ........ 2

உயர்கல்வியின் முக்கியத்துவம்
Importance of Higher Education

உதவித்தொகை
Scholarship

உயர்கல்விக்கான நலத்திட்டங்கள் மற்றும் தங்கும் விடுதிகள்
Schemes and Hostels

உயர்கல்வி வழிகாட்டல் குழு
Career Guidance Cell

இட ஒதுக்கீடு
Reservation

சான்றிதழ்கள்
Certificates

வங்கிக் கடன்
Bank Loan

கல்விப் பிரிவுகள் & வலைத்தளங்கள்
Education Streams & Websites

அயல்நாடுகளில் கல்வி கற்றல்
Education in Abroad

2 கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகள்
Arts and Science Courses ....... 23

3 பொறியியல் படிப்புகள்
Engineering Courses ....... 35

4 மருத்துவப் படிப்புகள்
Medical Courses ....... 43

5 வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த படிப்புகள்
Agriculture and Allied Courses ....... 50

6 பாலிடெக்னிக் மற்றும் ஐ.டி.ஐ. கல்லூரிகள்
Polytechnic and ITI Colleges ....... 54

7 போட்டித் தேர்வுகள்
Competitive Exams ....... 59



# உயர்கல்வியின் முக்கியத்துவம்
# Importance of Higher Education



ஒருவர் சமூகப் பொருளாதாரப் படிநிலையில் முன்னேறிச் செல்வதற்குச் சவால் எவ்வளவென்று எண்ணிப் பார்த்தால், இது புனிதம்; இது புனிதமன்று போன்ற வேறுபாடுகளைக் கற்பிக்கும் பழமைவாதக் கருத்தியல். மேலும், அதன் விளைவாக ஏற்பட்ட சமூகப் படிநிலைகளும் ஏற்றத்தாழ்வுகளும் கொண்ட இறுகிப்போன ஒரு சமூக அமைப்புமாகும். இத்தகைய அமைப்பில், ஒருவர் சமூக மற்றும் பொருளாதாரப் படிநிலையில் முன்னேறிச் செல்வது என்பதே சவால்தான்; அது அனைவர்க்கும் இயல்பாக அமைந்துவிடக் கூடியதன்று. பிறப்பின் அடிப்படையில் அமைந்துவிடும் இந்த ஏற்றத்தாழ்வில், ஒருவர் முன்னேறிச் செல்வதற்கான வாய்ப்புகள் கொண்ட சூழல் உருவாகாமல் போனால், அது அந்தத் தனிமனிதரை மட்டுமல்ல ஒட்டுமொத்த சமூகத்தையே பின்னிழுத்துவிடும். இத்தகைய படிநிலைகள் கொண்ட சமூகக் கட்டமைப்பில், ஒருவர் தன் வாழ்வில் வளர்வதற்குத் தேவையான தகவல்களே அவருக்குச் சரியான சமயத்தில் சென்று சேர்வதில்லை. தகவலறிவு பெறுவதிலேயே ஒரு சமச்சீர்நிலை இங்கே இல்லை. மேலும், ஒருவர் தன் பொருளாதாரத் தேவைக்காகவும் பண்பாட்டுக் காரணத்திற்காகவும் நீண்ட காலத்திற்கு மற்றவரைச் சார்ந்து இருப்பதானது, அவர் தன் சுய மதிப்பைத் தானே குறைத்துக்கொள்ளும் அவலச்சூழலையும் உருவாக்குகிறது.

இத்தகைய பின்னணியில், மேல்நோக்கிய சமூக வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில், அதற்குரிய உந்துசக்தியாக அமையக்கூடிய முறையான நிறுவனங்களைக் கட்டமைப்பது ஒன்றே சமூக மாற்றத்தை உருவாக்க வழிவகை செய்யும். அவ்வகையில் கல்வி நிறுவனங்களின் பங்கு இன்றியமையாதது. பல்வேறு சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணியிலிருந்து வரும் மாணவர்கள் அங்கே ஒன்றாகக் குழுமும் வாய்ப்பையும் தளத்தையும் உள்ளடக்கிய சமூகத்தின் அவசியத் தேவையையும் பறைசாற்றுகின்றனர். தவிர, உயர்கல்வி நிறுவனங்களானவை, ஒவ்வொரு தனிமனிதரும் மற்றவரைச் சார்ந்திருக்கும் எளிய பருவத்திலிருந்து விலகிச் சுயம் மிக்க தனிமனிதர்களாகப் பரிணமிக்கும் அரிய மாற்றத்தைக் கண்ணுறும் முக்கிய சாட்சியங்களாக விளங்குபவை.

மேற்கூறிய காரணங்களுக்காக, ஓர் உயர்கல்வி நிறுவனத்தில் சேர்வதானது ஒரு சமூக மற்றும் பொருளாதார மாற்றத்தை அடிப்படை அளவில் உறுதி செய்வதாகும். பொருளாதார அளவிலும் சமூக அளவிலும் மிகத் தேவையான ஞானத்தையும் திறன்களையும் பெறுவதன்வழி இவை சாத்தியமாகிறது. பலருக்கு உயர்கல்விப் படிப்பொன்றே தாங்கள் தம் கிராமத்தை அல்லது ஊராட்சி ஒன்றியத்தைவிட்டு வெளி உலகத்தைக் காண வருவதற்கான முதல் வாய்ப்பாக அமைகிறது. மேலும், இந்த உயர்கல்வி நிறுவனங்களானவை, தகவலறிவு கிடைக்கப் பெறுவதிலுள்ள சமச்சீரற்ற தன்மையை உடைக்கும் அறிவுக் கருவூலங்களாக விளங்குபவை. அதன்வழி, பல்வேறு துறைகளில் ஒருவர் தனக்கிருக்கும் வாய்ப்புகளை அறிவதற்குரிய சாத்தியங்கள் மிகுதியாகின்றன.

சில தனிமனிதர்களுக்கு மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழும் சமூக முன்னேற்றமானது காலங்காலமாகப் புழக்கத்திலிருக்கும் பழமைப் போக்குகளையே உயர்த்திப் பிடிக்க வைக்கிறது. ஆனால், அடிமட்டத்திலிருப்பவர்கள் கூட்டாகத் தம்முடைய சமூகப் படிநிலையில் மேலேறும்போது தங்களுடைய தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களையும் பேணுவதற்குரிய சூழல் மாற்றம் உருவாகிறது. காலப்போக்கில், மக்களும் பண்பாட்டின் பன்மைத்துவத்திற்கு மதிப்பளிப்பதன் அவசியத்தை உணரத் தொடங்குவர். பன்னெடுங் காலமாக வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சமூகப் பின்னணியிலிருந்து வரும் தனிநபர்கள் ஓர் ஆகச்சிறந்த முன்மாதிரிகளாக மற்றவர்களால் பார்க்கப்படும் சூழல் உருவானால் - பல தலைமுறைகள் வேண்டாம்; ஒரு தலைமுறைக்கு உள்ளாகவே நாம் மகத்தான சமூக மாற்றத்தைக் கண்ணுறலாம். உயர்கல்வியானது பலருக்கு முறையான துறைசார்ந்த வேலை வாய்ப்புகளுக்கான திறப்புகளை வழங்கவல்லது. நிரந்தரமான வருமானம் என்பது ஒருவரது வாழ்வில் நிலைத்தன்மையையும் உறுதிப்பாட்டையும் வழங்குவதோடு அந்நபருக்குச் சமூக அரண் என்கிற அனுகூலத்தையும் நல்கும்.

முறைசாராத் தொழில்களில் உள்ளோருக்கும் உயர்கல்வியானது, அவர்கள் தங்களுக்கு உரித்தான உரிமைகள் குறித்த புரிதலையும் உரிமைகோரலுக்கான தெளிவையும் பெற வைத்து அனைவரும் மாண்புற வாழும் சூழலை உருவாக்குகிறது.

எவ்வகையாயினும், உயர்கல்வி வாய்ப்பானது ஆண்டாண்டுக் காலங்கள் வறுமையில் உழன்று வந்த குடும்பங்கள் பலவும் மேலெழுந்து வருவதற்கான ஆற்றலை வழங்க வல்லது. நம் தமிழ்நாடு அனைவரையும் உள்ளடக்கிய ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக உருவெடுப்பதற்குரிய நெடும்பயணத்தில், நம் மனிதவள ஆற்றலே பெரும்பங்கு வகிக்கும். ஆற்றல் கொண்ட மனிதவளமானது தம்முடைய மேம்பட்ட சுய மதிப்பு, சுய மாண்பு மற்றும் நிதிசார் தன்னிறைவு ஆகியவற்றின் துணைகொண்டு இந்த மாபெரும் தமிழ்க் கனவை மெய்யாக்கும்.

# உதவித்தொகை
# Scholarship

### தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள உதவித்தொகைகள்

1. Post Matric Scholarship Scheme
2. First Graduate Scholarship
3. Scholarship to IIT, IIM and Central Universities.
4. Fee waiver for 7.5% preferential allocation students in professional courses
5. Fee waiver for Diploma
6. Free education scheme
7. Post matric scholarship for students with disabilities
8. Free education scheme – Professional courses
9. Free education scheme – Degree courses
10. Free education Scheme – Diploma courses

https://ssp.tn.gov.in/

- தமிழ்நாட்டில் மாநில, மத்திய அரசுகள் செயல்படுத்திவரும் உயர்கல்விக்கான உதவித்தொகைகள் இருபதுக்கும் மேற்பட்டவை. அவற்றுள் சில..

- அனைத்து உதவித்தொகைகளுக்கும் ஒரே இடத்தில் விண்ணப்பிக்க, வரும் கல்வி ஆண்டு முதல் State Scholarship Portal ஒன்றைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்த உள்ளது. மிகவும் எளிய முறையில், உங்கள் விவரங்களின் அடிப்படையில், சரியான உதவித்தொகைகளுக்கு விண்ணப்பிக்க இது உதவும்.

**மேலும் விவரங்களுக்கு, உங்கள் பள்ளியின் உயர்கல்வி வழிக்காட்டல் குழுக்களை அணுகவும்.**

- நீங்கள் சேரப் போகும் கல்லூரியிலும் இதற்கான வழிகாட்டுதல்கள் நிறைய கிடைக்கும்.

### முதல் பட்டதாரி உதவித்தொகை (First Graduate Scholarship) யாருக்கு?

1. குடும்பத்தில் முதல் பட்டதாரி

2. தொழில்துறை படிப்புப் பயிலும் மாணவர்கள்

3. கலந்தாய்வு (Counselling) மூலம் சேர்ந்திருக்க வேண்டும்.

- ஒவ்வொரு வருடமும் ரூபாய் 20,000 உதவித்தொகை

# உயர்கல்விக்கான நலத்திட்டங்கள் - Schemes

உயர்கல்வியானது அனைவரையும் சென்று அடையவும், அதில் எழும் இன்னல்களை அகற்றவும், தமிழக அரசு பல நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 1. புதுமைப் பெண் - Pudhumai Penn.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில்

1. இளங்கலை பட்டப்படிப்பு (UG Degree)
2. டிப்ளமோ (Diploma)
3. ITI

போன்ற படிப்புகளை மேற்கொள்ளும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 ஊக்கத்தொகை அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

### 2. 7.5% தொழில்முறை படிப்புகளில் இட ஒதுக்கீடு (7.5% Preferential Allocation)

அரசுப் பள்ளியில் படித்த மாணவ, மாணவியருக்கு

1. பொறியியல்
2. மருத்துவம்
3. சட்டம்
4. வேளாண்மை போன்ற தொழில்முறை படிப்புகளில் 7.5% இடங்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

https://naanmudhalvan.tn.gov.in/

### 3. நான் முதல்வன்

திறன் சார்ந்த பயிற்சிகளை அளிக்கும் ஒருங்கிணைப்புத் தளமாக 'நான் முதல்வன்' தொடங்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதற்குத் தேவையான தகுதிகள், திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தை மாணவர்களுக்கு வழங்கும் பாடத்திட்டங்கள் கல்லூரிப் பருவத்திலேயே சிறந்த பயிற்சி நிறுவனங்களின் மூலம் திறன் பயிற்சிகள் ஆகியவற்றை வழங்கும் விதமாக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், வேலையளிப்பவர்கள் தங்களது நிறுவனம் மற்றும் தொழிற்சாலைகளில் உள்ள திறன் இடைவெளியைச் சரிசெய்யத் தேவையான திறன்களுக்கான பயிற்சிகளை மாணவர்களுக்கு அளிக்கவும், இத்திட்டம் வழிவகை செய்கிறது.

**நான் முதல்வன் திட்டத்தின் அம்சங்கள்**


- கட்டாயப் படிப்புகள் (Mandatory courses)
- கட்டணமில்லாப் படிப்புகள் (Free courses)
- திறனறித்தேர்வு (Psychometric test)
- கட்டணப் படிப்புகள் (Paid courses)
- நிரல் திருவிழா (Hackathons)
- திறன்மிகு பயிற்சி நிலையம் (Finishing school)

# தங்கும் விடுதிகள் - Hostels


வெவ்வேறு ஊர்களில் இருந்து வரும் மாணவர்கள் தங்கிப் படிக்க ஏதுவாகக் கட்டணமில்லா விடுதிகளை அரசு ஏற்படுத்தி உள்ளது. இந்த வசதிகளைப் பயன்படுத்தி, பிடித்த கல்லூரியில் படிக்கலாம். இதைப் பற்றி அறிய உங்கள் பள்ளியின் உயர்கல்வி வழிகாட்டல் குழுவை அணுகவும்.

# இட ஒதுக்கீடு - Reservation


இந்தச் சமுதாயத்தை ஒரு மரம் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அதில் காய்க்கும் பழங்கள், முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள்.




இப்படத்தில் மரம் ஒரு பக்கம் சாய்ந்த நிலையில் இருக்கின்றது. சாய்ந்த பக்கம் மட்டும் பழங்கள் தாமாக அதன் கீழே இருப்பவருக்குக் கிடைக்கிறது. மறுபக்கம் இருப்பவர் முயன்றும் பலனில்லை. இதுவே சமத்துவமின்மை **(Inequality)** ஆகும்.





இதிலும் மரம் ஒரு பக்கம் சாய்ந்த நிலையிலேயே உள்ளது. உயரே சென்று பழங்களைப் பறிக்க இருவருக்கும் ஒரே மாதிரியான ஏணிகள் வழங்கப்படுகின்றன. இருப்பினும் மரம் சாய்ந்திருக்கும் பக்கம் நிற்பவர்க்கு அதிக எண்ணிக்கையில் பழங்கள் கிடைக்கின்றன. ஆனால், இன்னொருவருக்கோ ஏணியில் ஏறியும் பழங்கள் எதுவும் கிடைக்கவில்லை. இருவருக்கும் ஒரே உயரத்திலான ஏணி கொடுக்கப்படுவதால் இந்நிலையை சமத்துவ நிலை **(Equality)** எனலாம். ஆனால் இந்த சமத்துவ நிலை மட்டுமே ஒருவருக்குப் பழங்கள் கிடைக்க உதவிடவில்லை என்பதை உணர வேண்டும்.




இதிலும் மரம் ஒரு பக்கம் சாய்ந்த நிலையிலேயே உள்ளது. இப்போது, பழங்கள் கிடைக்காதவருக்கு மட்டும் இன்னும் கூடுதல் உயரமுள்ள ஏணி வழங்கப்படுகிறது. இப்போது முதல் முறையாக அவருக்கும் பழம் கிடைக்கின்றது. ஆனால், இத்தனை நாட்களாய்ப் பழங்களைச் சிரமமின்றி பெற்ற இன்னொருவருடன் ஒப்பிடுகையில் இந்த

எண்ணிக்கையும் மிகக் குறைவே. இவ்வாறாக, பழங்கள் கிடைக்காமலிருந்த நபருக்கு சற்றே உயரமான ஏணி கொடுக்கப்பட்ட நிலையைச் சமச்சீர்மை (Equity) எனலாம். சுருங்கச் சொன்னால், அனைவருக்கும் ஒரே மாதிரியான கருவிகளை வழங்காமல் ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப வாய்ப்புகளை உருவாக்கித் தரும் நிலையே சமச்சீர்மையாகும். எனினும், நாம் அடுத்த நிலையை எட்ட வேண்டியுள்ளது.




மாற்ற வேண்டியது மனிதர்களையோ ஏணிகளையோ அல்ல, சாய்ந்து இருக்கும் அந்த மரத்தைத்தான் என்று பெருமுயற்சியுடன் மரத்தை நேர்படுத்துகின்றனர். எல்லாப் பக்கங்களும் நன்றாய்க் காய்க்கும் மரம் அனைவருக்கும் பழங்களை சம அளவில் தருகிறது. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் இந்நிலையே சமூக நீதி (Social Justice) ஆகும்.

**இப்படங்களின் மூலம் நாம் புரிந்து கொள்ள வேண்டியவை**

1. அந்த மனிதர்கள் இருவரும் ஒரே தகுதியுடனும் தேடலுடனும் உள்ளனர். மரம்தான் சாய்ந்து இருந்தது.
2. புதிதாக ஒருவருக்குப் பழங்கள் கிடைப்பதால், மற்றொருவருக்குக் கிடைக்காமல் போவதில்லை.
3. சமூக நீதி நிலையில் மரம் நேராகவே இருக்கிறது – எப்பக்கமும் சாயவில்லை.

**உயர் கல்வியில் இட ஒதுக்கீடு (சதவீதத்தில்)**

**கல்வி மட்டுமே சமத்துவம் மலரச் செய்யும் மிகப்பெரிய ஆயுதம்**
**கலைஞர் மு. கருணாநிதி**



# சான்றிதழ்கள் - Certificates

அக்கா, 12th Mark sheet வந்துருச்சு! இனி நான் College-க்கு apply பண்ணிடலாம்ல?

தம்பி, Mark sheet மட்டும் இல்ல, இன்னும் கொஞ்சம் Certificate வேணும். என்ன என்று சொல்லவா?

**கல்லூரிக் கல்விக்கு விண்ணப்பிக்கும்போது மாணவர்கள் வைத்திருக்க வேண்டிய முக்கியச் சான்றிதழ்கள்**

- பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (X Mark sheet)
- பதினோராம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (XI Mark sheet)
- பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (XII Mark sheet)
- மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate)
- சாதிச் சான்றிதழ் (Community Certificate)
- வருமானச் சான்றிதழ் (Income Certificate)
- ஆதார் அடையாள அட்டை (Aadhar card)
- புகைப்படம் (Photo)
- விளையாட்டுச் சான்றிதழ்கள் (Sports Certificate – if Applicable)
- இருப்பிடச் சான்றிதழ் (Nativity Certificate – if Applicable)
- முன்னாள் ராணுவத்தினரின் வாரிசுச் சான்றிதழ் (Ex Servicemen Certificate – if applicable)
- இலங்கைத் தமிழ் அகதி என்பதற்கான சான்றிதழ் (Srilankan Tamil Refugee Certificate – if applicable)
- முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் (First Graduate Certificate – if applicable)
- மாற்றுத்திறனாளி என்பதற்கான சான்றிதழ் (PWD Certificate – if applicable)

இத்தன இருக்கே! எப்டிகா வாங்றது?


இ-சேவை மையத்திற்குப் போனா எல்லா Certificates-யும் ஒரு வாரத்துல வாங்கிடலாம்.

### இ-சேவை மையத்தில் சான்றிதழ்களைப் பெறுவதற்கான வழிமுறை

1. அருகில் இருக்கும் இ-சேவை மையத்திற்குச் செல்லவும்.
2. தேவைப்படும் சான்றிதழுக்கான விண்ணப்பத்தைப் பெறவும்.
3. விண்ணப்பத்தை நிரப்பி, தேவையான ஆவணங்களைக் கொடுத்து, கட்டணத்தைச் செலுத்தவும்.
4. விண்ணப்ப எண்ணுடன் ஒரு குறுஞ்செய்தி வரும்.
5. 7 முதல் 10 நாள்களுக்குள் உங்கள் சான்றிதழ் வழங்கப்படும்.

https://bcw.tn.gov.in/

இணையவழியிலும் (Online application) விண்ணப்பிக்கலாம் www.tnesevai.tn.gov.in என்ற இணையத்தளத்திற்குச் செல்லவும்.பயனாளர் உள்நுழை, என்பதைச் சொடுக்கி, பதிவு செய்யவும்



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கையை உயர்த்திடவும், அவர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய தங்குமிட வசதிகளை வழங்கிடவும் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி மற்றும் சென்னையில், நவீன மாணவர் விடுதிகள் ஐந்தினைக் கட்டும் பணிகள் 150 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக சென்னை, தஞ்சாவூர், தருமபுரி, நாமக்கல் மாவட்டங்களில் கல்லூரி மாணவியர் விடுதிகளும் மதுரையில் கல்லூரி மாணவர் விடுதியும் மொத்தம் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு கட்டப்படும். இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பன்முகத் திறனை வளர்க்கும் விதமாக அவர்களுக்கென ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

நவீன வசதிகளுடன் கூடிய தங்குமிடம்

தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட் 2024 – 25



https://tnadw-hms.in/home

# Supplementary Exams and Revaluation

நான் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் தோல்வி அடைந்து விட்டேன். எனக்கு மிகவும் வருத்தமாக உள்ளது. மற்றவர்களைப் போல் என்னால் கல்லூரியில் படிக்க இயலாது.

இல்லை இல்லை. உன்னாலும் கல்லூரியில் சேர்ந்து மற்றவர்களைப் போலவே படிக்க இயலும். அதுவும் இந்த ஆண்டே நடக்கும்.

அப்படியா!!! இது எவ்வாறு இயலும்?

பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி அடையாத பல மாணவர்கள் மனமுடைந்து அடுத்து என்ன செய்வது என்றே தெரியாமல் தவிக்கின்றனர். அவர்களும் சக மாணவர்களைப் போலவே அதே ஆண்டில் வரும் துணைத் தேர்வுகளை எழுதித் தேர்ச்சியடைந்து இடைவெளி இல்லாமல் கல்லூரியில் சேர இயலும். அதற்கு மாணவர்கள் செய்ய வேண்டியவை:

துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்கலாம்
(அல்லது)
மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கலாம்
(அல்லது)
மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கலாம்

**துணைத் தேர்வு என்பது:** தேர்வு முடிவுகள் மார்ச் மாதம் வெளியானவுடன் தேர்ச்சி அடையாத மாணவர்களும்/ பொதுத் தேர்வு எழுதத் தவறிய மாணவர்களும் அதே ஆண்டில் ஜூன் மாதம் நடைபெறும் துணைத் தேர்வுக்கு விண்ணப்பித்துத் தேர்வு எழுதலாம். www.dge.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக அவர்கள் படித்த பள்ளிக்கே சென்று விண்ணப்பித்துக் கொள்ளலாம். தனித்தேர்வர்கள் (பள்ளிகளுக்கு வராமல் தாங்களாகவே படித்துத் தேர்வு எழுதுபவர்கள்) கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்கள் (Nodel Centres) வாயிலாக விண்ணப்பித்துத் தேர்வு எழுதலாம்.

| | |
|---|---|
| பொதுத்தேர்வு எழுதித் தோல்வியுற்ற பாடங்களில் தேர்வெழுதும் தேர்வர்கள் | ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ. 50/- வீதம் தேர்வுக் கட்டணமும், அதனுடன் இதரக் கட்டணமாக ரூ.35/-ம் செலுத்த வேண்டும். |

**மறுக்கூட்டல் என்பது:** நன்றாகத் தேர்வு எழுதி குறைவான மதிப்பெண் பெற்றதாகக் கருதுபவர்கள் தங்களது மதிப்பெண் கூடுதலில் பிழை இருக்கும் எனக் கருதினால் அவர்கள் மறுகூட்டலுக்கு www.dge.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

| | |
|---|---|
| உயிரியல் பாடம் மட்டும் | ரூ.305 |
| பிற பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | ரூ.205 |

**மறுமதிப்பீடு என்பது:** நன்றாகத் தேர்வு எழுதி குறைவான மதிப்பெண் பெற்றதாகக் கருதுபவர்கள் தாங்கள் எழுதிய விடைத்தாள் நகலைப் (Scan Copy of the Answer Script) பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். விடைத்தாள் நகலை மாணவர்கள் பெற்றதும் ஏதேனும் திருத்தம் இருப்பதாகக் கருதும் பட்சத்தில் மறுக்கூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கலாம்.

| | |
|---|---|
| பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | ரூ.505 |

**மனதில் உள்ள சந்தேகங்கள்:**

1) துணைத் தேர்விற்கு, மறுக்கூட்டலுக்கு மற்றும் மறுமதிப்பீட்டிற்க்கு எப்படி விண்ணப்பிப்பது?
www.dge.tn.gov.in என்ற இணையத்தளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

2) எப்போது விண்ணப்பிக்க வேண்டும்?
தேர்வு முடிவுகள் வெளியான சில நாள்களிலேயே இணையத்தளத்தில் அறிவிப்பு வந்தவுடன் விண்ணப்பிக்கலாம்.

3) துணைத் தேர்வு எழுதித் தேர்ச்சி பெறக் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான முயற்சிகள் உள்ளதா?
இல்லை; தேர்வில் தேர்ச்சி பெறும்வரை தேர்வு எழுதலாம்.

4) பள்ளிக்குச் செல்லாத மாணவர்களும் பொதுத்தேர்வு எழுத முடியுமா?
எழுத முடியும்; கல்வி மாவட்டங்களில் உள்ள சேவை மையங்கள் (Nodel Centres) மூலம் விண்ணப்பித்துத் தேர்வு எழுதலாம்.

5) துணைத் தேர்வுகள் எப்போது நடைபெறும்?
ஜுன் மாதத்தில் நடைபெறும்.

6) துணைத் தேர்வுக்கு விண்ணப்பிப்பதிலிருந்து தேர்வு முடிவுகள் வெளியாகும் வரை உள்ள படிநிலைகள் என்ன?
- தேர்வு அறிவிப்பு
- தேர்வுக்கால அட்டவணை
- தேர்விற்கு விண்ணப்பித்தல்
- நுழைவுச் சீட்டு பதிவிறக்கம்
- தேர்வு
- தேர்வு முடிவுகள் வெளியாதல்

7) தேர்வு நாளில் விடுப்பு எடுத்தால் என்ன செய்ய வேண்டும்?
துணைத் தேர்வுக்கு விண்ணப்பித்துத் தேர்வு எழுத வேண்டும்.

# வங்கிக் கடன் - Bank Loan



அண்ணா, bankல education loan எப்டி வாங்றது?



அது ரொம்ப simple மா! இப்போ online ல Vidyalakshmi portal லயே எல்லாத்தையும் கொண்டு வந்துட்டாங்க.

## Vidyalakshmi இணையத்தில் கடன் பெற வழிமுறை


https://www.vidyalakshmi.co.in/

1. www.vidyalakshmi.co.in என்ற இணையத்தளத்திற்குச் செல்லவும்.
2. விவரங்களை நிரப்பிப் பதிவு செய்யவும்
3. தேவையான ஆவணங்களைப் பதிவேற்றம் செய்யவும்.
4. உங்களுக்கான வங்கிகளில் இருந்து அழைப்பு வரும்.
5. ஆவணங்களுடன் வங்கிக்கு நேரில் செல்ல வேண்டும்.
6. நேர்காணல் முடிந்ததும் கல்விக் கடனை வங்கி வழங்கும்.
7. உங்கள் கடனின் நிலையை vidyalakshmi இணையத்தளத்தில் பார்த்துக் கொள்ளலாம்.
8. படிப்படியாக அறிந்து கொள்ள QR Codeஐ Scan செய்யவும்.

### மனதில் உள்ள சந்தேகங்கள்

**கல்லூரிக்குக் கொடுக்கப்படும் நன்கொடைகள் கடனில் சேர்த்துக் கொள்ளப்படுமா?**

இல்லை Donations/Capitation Fees கடன் தொகையில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.




2. வட்டியை மாதந்தோறும் கட்ட வேண்டுமா?

| | |
|---|---|
| மாதந்தோறும் கட்டுவதா? மொத்தமாக அசலுடன் சேர்த்துக் கட்டுவதா? என்பதைக் கடனுக்காக விண்ணப்பிக்கும்போதே தெளிவாக விண்ணப்பத்தில் குறிப்பிடவும். |  |

3. எவ்வளவு படித்தாலும் வட்டித் தள்ளுபடி உண்டா?அந்தத் தள்ளுபடி எல்லோருக்கும் உண்டா?

| | |
|---|---|
| தகுதியான நபர்களுக்கு மட்டும் வட்டித்தள்ளுபடி உண்டு. இளங்கலைக்குக் கொடுக்கப்பட்டால் முதுகலைக்குக் கிடையாது. |  |


4. இளங்கலைப் படிப்புக்குக் கடன் பெற்று முதுகலைக்கும் கடன் வாங்க முடியுமா?

| | |
|---|---|
| வாங்கலாம். இளங்கலை முடித்தவுடன் அதற்கான தகவலை வங்கியில் கடிதம் மூலம் தெரியப்படுத்தவும். |  |

5. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் கடன் வாங்கலாம்?

| | |
|---|---|
| எத்தனை பேர் வேண்டுமானாலும் வாங்கலாம். ஒவ்வொரு கடனும் தனித்தனிக் கடனாகத்தான் கருதப்படும். |  |

6. பான் கார்டு (PAN Card) அவசியம் தேவையா?

| | |
|---|---|
| தற்போது அது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பெற்றோர் மாணவர் இருவருக்கும் தேவை. |  |

7. நிர்வாக ஒதுக்கீட்டில் படித்தால் கடன் கிடைக்குமா?

| | |
|---|---|
| கிடைக்கும். ஆனால், பொதுநுழைவுத் தேர்வில் கிடைத்தவர்களின் டியூசன் கட்டண அளவிற்குத்தான் கிடைக்கும் வட்டிச் சலுகை கிடையாது. |  |

Others - Tnsdc Kalluri Kanavu_(TM)_Samba Publishing Company

௮ படிப்பின் இடையே கடன் பெற முடியுமா?

| | |
|---|---|
| முடியும். படிப்பின் மீதமுள்ள வருடங்களுக்கு மட்டும் கிடைக்கும் |  |

௯ கல்விக்கடன் பெற வயது வரம்பு உண்டா?

| | |
|---|---|
| இல்லை. |  |

௰ வட்டிச் சலுகை பெற வருடா வருடம் வருமானச் சான்று வங்கிக்குக் கொடுக்க வேண்டுமா?

| | |
|---|---|
| தேவையில்லை. முதலில் கடன் பெறும்போது கொடுத்தால் போதுமானது. |  |



தமிழ்நாட்டு மாணவர்களின் கல்லூரிக் கனவை நனவாக்கிடவும் அவர்தம் பெற்றோரின் நிதிச்சுமையைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலும், தேவையின் அடிப்படையில் 2024–25ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு 2,500 கோடி ரூபாய் அளவிற்கு, பல்வேறு வங்கிகள் மூலம் கல்விக்கடன் வழங்கிடுவதை அரசு உறுதி செய்திடும்.

1 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.2,500 கோடி கல்விக் கடன்

தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட் 2024 – 25



| S.No | University | District | Streams |
|---|---|---|---|
| 1 | Alagappa University | Karaikudi | Arts & Science |
| 2 | Anna University | Chennai | Engineering |
| 3 | Annamalai University | Cuddalore | Arts & Science |
| 4 | Bharathiar University | Coimbatore | Arts & Science |
| 5 | Bharathidasan University | Tiruchirappalli | Arts & Science |
| 6 | Madurai Kamaraj University | Madurai | Arts & Science |
| 7 | Mother Teresa Women's University | Kodaikanal | Arts & Science |
| 8 | Manonmaniam Sundaranar University | Tirunelveli | Arts & Science |
| 9 | Periyar University | Salem | Arts & Science |
| 10 | Tamil Nadu Open University | Chennai | All types |
| 11 | Teachers Education University | Chennai | Education |
| 12 | Thiruvalluvar University | Vellore | Arts & Science |
| 13 | University of Madras | Chennai | Arts & Science |
| 14 | Tamil Nadu Agricultural University | Coimbatore | Agriculture |
| 15 | Tamil University | Thanjavur | Tamil |
| 16 | The Tamil Nadu Dr. Ambedkar Law University | Chennai | Law |
| 17 | The Tamil Nadu National Law University | Tiruchirappalli | Law |
| 18 | Tamil Nadu Dr.M.G.R. Medical University | Chennai | Medicine |
| 19 | Tamil Nadu Physical Education and Sports University | Chennai | Sports |
| 20 | Tamil Nadu Veterinary and Animal Sciences University | Chennai | Veterinary |
| 21 | Tamil Nadu (Dr. J. Jayalalitha) Fisheries University | Nagapattinam | Fisheries |
| 22 | The Tamil Nadu (Dr. J. Jayalalitha) Music and Fine Arts University | Chennai | Music & Arts |

# கல்விப் பிரிவுகள் & வலைத்தளங்கள்
# Education Streams & Websites

தமிழ்நாட்டில் உள்ள சில கல்விப் பிரிவுகள்

| | |
|---|---|
| Arts, Humanities, Social Work & Development | www.tndce.tn.gov.in<br>www.mssw.in<br>www.tiss.edu<br>www.ugc.gov.in<br>www.socialjustice.gov.in |
| Engineering, Technology & Architecture | www.dte.tn.gov.in<br>www.annauniv.edu<br>www.aicte-india.org<br>www.education.gov.in/iits<br>www.education.gov.in/nits<br>www.education.gov.in/iiits |
| Medicine & Health care | www.tnhealth.tn.gov.in<br>www.tnmgrmu.ac.in<br>www.aiims.edu<br>www.natboard.edu.in<br>www.nmc.org.in<br>www.neet.nta.nic.in |
| AYUSH | www.aaccc.gov.in<br>www.ccrum.res.in<br>www.ayush.gov.in<br>www.siddhacouncil.com<br>www.ccras.nic.in<br>www.ccrhindia.nic.in |
| Agriculture, Veterinary and Fishery | www.tnau.ac.in<br>www.tanuvas.ac.in<br>www.tnjfu.ac.in<br>www.icar.org.in<br>www.icar.nta.nic.in<br>www.agricoop.gov.in |
| Science & Research | www.iisc.ac.in<br>www.csir.res.in<br>www.main.icmr.nic.in<br>www.csirnet.nta.nic.in<br>www.dst.gov.in<br>www.tifr.res.in |
| Law & Legal Studies | www.tndalu.ac.in<br>www.lawmin.gov.in<br>www.nludelhi.ac.in<br>www.consortiumofnlus.ac.in<br>www.barcouncilofindia.org<br>www.tndls.ac.in |
| Commerce & Finance | www.icai.org<br>www.finmin.nic.in<br>www.icsi.edu<br>www.commerce.gov.in<br>www.icmai.in<br>www.nibmindia.org |


| | |
|---|---|
| Management & Business | www.iimcat.ac.in<br>www.startuptn.in<br>www.ediindia.org<br>www.msme.gov.in<br>www.education.gov.in/iims<br>www.ediin.in |
| Fine Arts & Design | www.tnjjmfau.in<br>www.artandculture.tn.gov.in<br>www.nid.edu<br>www.nift.ac.in<br>www.indiaculture.gov.in<br>www.nsd.gov.in |
| Education & Teaching | www.tnteu.ac.in<br>www.ncte.gov.in<br>www.iasetamilnadu.ac.in<br>www.education.gov.in<br>www.riemysore.ac.in<br>www.ugcnet.nta.nic.in |
| Tourism, Hospitality & Hotel Management | www.tamilnadutourism.org<br>www.tourism.gov.in<br>www.nchm.gov.in<br>www.nchmjee.nta.nic.in<br>www.ihm-chennai.org<br>www.aihmct.cbtexam.in |
| Mass Communication & Journalism | www.iimc.nic.in<br>www.iimc.admissions.nic.in<br>www.mib.gov.in<br>www.iijnm.org<br>www.pib.gov.in<br>www.presscouncil.nic.in |
| Defence Army, Navy & Air Force | www.tnpa.tn.gov.in<br>www.ngodarpan.gov.in<br>www.nda.nic.in<br>www.afmc.nic.in<br>www.sainikschoolsociety.in<br>www.mod.gov.in |
| Higher Studies for Differently-Abled | www.scd.tn.gov.in<br>www.depwd.gov.in<br>www.nhfdc.nic.in<br>www.scpwd.in<br>www.niepmd.tn.nic.in<br>www.nivh.gov.in |
| Other Entrance Exams | www.nta.ac.in<br>www.iimcat.ac.in<br>www.josaa.nic.in<br>www.cuet.nta.nic.in<br>www.aiimsexams.ac.in<br>www.icar.nta.nic.in |

# அயல்நாடுகளில் கல்வி கற்றல்
# Education in Abroad



School முடிச்சதும் foreign ல போய் படிக்க முடியுமா?

முடியுமே! நம்ம ஊர்ல இருந்தே நெறய பேர் போய் படிச்சிருக்காங்க



- அயல்நாடுகளில் உயர்கல்வி பயில்வதில் நிறைய நற்பயன்கள் உள்ளன. வளர்ந்த நாடுகளில் வேலைவாய்ப்பு பெற வாய்ப்புள்ளது; அதுமட்டுமன்றி வெளிநாடுகளில் பயின்றுவிட்டு இந்தியா திரும்பினால் முன்னோடித் தொழில் நிறுவனங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பும் நல்ல ஊதியமும் கிடைக்கின்றன.
- வெளிநாடுகளுக்குச் சென்று பயிலும் மாணவர்கள் வரிசையில் தமிழ்நாடு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இளநிலைப் படிப்புக்கு மதிப்பெண் விகிதம் ஓர் அடிப்படைத் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- பெரும்பாலும் இந்திய உயர்கல்விச் சூழல் என்பது மாணவர்களின் மதிப்பெண்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்பதால் இதுகுறித்த விழிப்புணர்வு எல்லா மாணவர்களுக்கும் இருக்கும். ஆனால், ஒரு சில நாடுகளுக்கு மொழியறிவுச் சான்றிதழ் மிக முக்கியமானது.
- ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் பயில ஆங்கில மொழிப் புலமையில் அவர்கள் பரிந்துரைக்கும் தகுதித் தேர்வில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
- பிரிட்டன், ஆஸ்திரேலியா நாடுகளில் பயில IELTS (International English Language Testing System) எனப்படும் ஆங்கில மொழிப்புலமைத் தகுதித் தேர்வில் இளநிலைப் படிப்பிற்குக் குறைந்தபட்சம் 6.0 புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும். இந்தத் தேர்வானது கேட்டல், படித்தல், எழுதுதல், பேசுதல் ஆகிய மதிப்பீடுகளை உள்ளடக்கியது. மேலும், இந்தத் தேர்விற்கான சான்றிதழ் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்பதால் அதற்கேற்பத் திட்டமிடுவது நல்லது.

- IELTS போலவே மற்றொரு ஆங்கிலப் புலமைத் தேர்வான TOEFL (Test of English as a Foreign Language) சான்றிதழை 119 நாடுகளில் உள்ள 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்கள் மொழித்தகுதியாக ஏற்றுக் கொள்கின்றன. ஆகவே, எந்த நாட்டிற்கு எந்த மொழிப் புலமைத் தேர்வு எழுத வேண்டும் என்று சரிபார்த்துக் கொள்வது மிக அவசியம்.
- உயர்கல்விக்காக வெளிநாடு செல்ல விரும்பும் மாணவர்கள் எந்த நாட்டிற்குப் போக வேண்டும் என முடிவெடுத்தபின் செய்ய வேண்டிய முதல் பணி, கடவுச்சீட்டு (Passport) பெறுவது. அந்த நாட்டின் குடியேற்றத்திற்கு நுழைவு இசைவு (Visa) தேவையான ஆவணங்கள் குறித்த தகவல்களைத் தூதரக (Embassy) இணையத்தளம் மூலம் தெரிந்து கொள்வது.
- சில நாடுகள் இந்திய மாணவர்களின் கல்விச் சான்றிதழ்களின் நம்பகத்தன்மையும் (Creditability) தங்கள் நாட்டின் கல்வித்திட்டத்திற்கு இணையாக (Equivalent Certificate) மாணவரின் கல்விச் சான்றிதழ் உள்ளதா என்பதையும் கேட்பார்கள்.
- இதற்கான சான்றளிப்பை (Attestation) இந்தியாவில் உள்ள குறிப்பிட்ட நாட்டின் தூதரக அலுவலகம் மூலம் பெற்றுக் கொள்ளலாம். நாம் கல்விக் கட்டணத்தை உரிய நேரத்தில் ஒவ்வொரு பருவத்திற்கும் செலுத்த இயலும் என்பதற்கான வங்கிக் கணக்கு ஆதாரத்தை விசா பெறும்போது சமர்ப்பிக்க வேண்டும்.
- ஆகவே, வங்கிக் கடன் மூலம் செல்லும் சுயநிதி (Self-Financing) மாணவர்கள் முன் கூட்டியே வங்கி இருப்பில் இருக்க வேண்டிய சேமிப்புத்தொகை குறித்துத் திட்டமிடுதல் அவசியம். உதவித்தொகை மூலம் வெளிநாடு செல்பவர்கள் அந்தக் கல்வி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட அனுமதிச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- விசா பெறுவதில் சுயநிதி மாணவர்களைப் போல இவர்களுக்கு அதிக சிரமம் இருக்காது.



**தமிழ்ப் புதல்வன்**

அரசுப் பள்ளிகளில் பயின்ற, ஏழை எளிய மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடவும் அரசுப் பள்ளி மாணவரின் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திடவும் "தமிழ்ப் புதல்வன்" எனும் ஒரு மாபெரும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி சேரும் மாணவர்கள் பாடப் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்களை வாங்கி அவர்களது கல்வியை மெருகேற்றிட உதவும் வகையில், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.

தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட்
2024 – 25

# உயர்கல்வி வழிகாட்டல் குழு - Career Guidance Cell

உயர்கல்வி தொடர்பான கேள்விகள்/சந்தேகங்களைத் தீர்க்கவும், தேவையான ஆலோசனைகளை வழங்கவும் பள்ளி அளவிலான வழிகாட்டல் குழு.




**1. உறுப்பினர்கள்**

- அரசுப் பள்ளித் தலைமையாசிரியர்
- உயர்கல்வி வழிகாட்டல் பயிற்சி பெற்ற முதுகலை ஆசிரியர்
- முன்னாள் மாணவர்கள்
- பள்ளி மேலாண்மைக்குழுத் தலைவர்
- பள்ளி மேலாண்மைக்குழுத் துணைத் தலைவர்
- பள்ளி மேலாண்மைக்குழுக் கல்வியாளர்
- பள்ளி மேலாண்மைக்குழுக் கருத்தாளர்
- நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள்

**2. யாருக்கெல்லாம்?**

அரசுப் பள்ளிகளில் 9 முதல் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு. குறிப்பாக 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் தேர்வு எழுதிய/எழுதாத மாணவர்கள்
தேர்ச்சி பெற்ற/பெறாத மாணவர்கள் மற்றும் இடைநின்ற மாணவர்கள்

**3. குழுச் செயல்பாடுகள்**

1. மாணவர்களுக்கான புலனக் குழுக்களை ( WhatsApp groups) உருவாக்கிப் பயிற்சி அளித்தல்.
2. கல்லூரிச் சேர்க்கை குறித்த விவரங்களைப் பகிர்தல்.
3. விண்ணப்பங்களை நிரப்புவதில் உதவி செய்தல்.
4. மாணவர்கள் உதவித்தொகையைப் பெற உதவுதல்.
5. பள்ளிகளில் ஆலோசனை முகாம்களை ஒருங்கிணைத்தல்.
6. பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு வழங்குதல்



# கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்புகள்

## தமிழ்நாட்டில் கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்புகள் வழங்கும் பல்கலைக்கழகங்கள்

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
www.tamiluniversity.ac.in

சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை
www.unom.ac.in

திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்
www.tvu.edu.in

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்
www.annamalaiuniversity.ac.in

அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி
www.alagappauniversity.ac.in

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி
www.bdu.ac.in

பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்
www.b-u.ac.in

பெரியார் பல்கலைக்கழகம், சேலம்
www.periyaruniversity.ac.in

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
www.mkuniversity.ac.in

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
www.msuniv.ac.in

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்,கொடைக்கானல்
www.motherteresawomenuniv.ac.in

டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம், சென்னை
www.tnjjmfau.in

சென்னை மாநிலக் கல்லூரியில் பட்டம் பெற்ற மு.க.ஸ்டாலின் 1989ஆம் ஆண்டு முதல்முறையாக தமிழகச் சட்டசபைக்குத் தேர்வானார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை மாநகராட்சியின் முதல் மேயர் எனப் பெயர் பெற்றார். பின்பு அமைச்சராகவும், துணைமுதல்வராகவும் பதவி வகித்தார். தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக உள்ளார்.


மு.க.ஸ்டாலின்

Others - Tnsdc Kalluri Kanavu_(TM)_Samba Publishing Company

# கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் பட்டப் படிப்புகள்

1. B.A. Psychology
2. B.A. English
3. B.A. in Journalism/Communication
4. B.Sc. Biology
5. B.Sc. Mathematics
6. B.A. Statistics (Hons.)
7. B.A. Linguistics
8. B.Com
9. BBA (Bachelor in Business Administration)
10. BMC (Bachelor in Mass Communication)
11. BMS (Bachelor in Media Studies)
12. B.Tech (Hotel Management & Catering Technology)

# புதிதாகச் சேர்க்கப்பட்ட படிப்புகள்

1. B.Sc. Artificial intelligence and Data Science
2. B.Sc. Manufacturing Technology
3. B.Sc. Wild Life Biology
4. BBA International Business, Shipping & Logistics
5. B.A. Labour Management,
6. B.A. Criminology & Political Science
7. B.Com Digital Marketing

# நான் முதல்வன்

கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் பணியில் சேருவதற்கு அவர்களைத் தயார்படுத்தும் வகையில் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் திறன் பயிற்சிகளை அரசு வழங்கி வருகிறது.

இவற்றில், கட்டணமில்லாமல் கல்லூரிப் பாடத்திட்டத்துடன் சில பயிற்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. குறைந்த கட்டணத்துடன் சில பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

அவற்றுள் சில...

1. Language Proficiency for Employability
2. Digital Skills for Employability
3. Emerging Technology for Employability
4. Advanced Platform Technology
5. Data Analytics with Advanced Tools for Employability
6. Digital Banking, Logistics and Audit Essentials for Employability
7. Medical coding for Employability
8. Employability readiness

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை செயல்படுத்த, அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் (அண்ணா பல்கலைக்கழக) உறுப்புக் கல்லூரிகளில், உயர்தர கணினிகள், திறன்மிகு துணைக் கருவிகளுடன் அதிவேக இணைய இணைப்புகளுடன் கூடிய 'நான் முதல்வன் திறன் மற்றும் வேலைவாய்ப்பு மையம்' (Naan Mudhalvan Skill & Placement Centre) அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.



தமிழ்நாட்டில் பரவலாக கல்லூரிகளில் திறன் பயிற்சிக் கட்டமைப்பை உருவாக்க அரசு மற்றும் அரசு உதவிபெறும் 100 பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திறன் பயிற்சிக் கட்டமைப்புகள் (Skill Labs) உருவாக்கப்படும்.

நான் முதல்வன் திட்டத்தின்கீழ் 100 கலை & அறிவியல், பொறியியல் கல்லூரிகளில் திறன் ஆய்வகங்கள்

தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட் 2024 - 25

செய்தி வெளியீடு எண் : 841 நாள் : 05.05.2023

செய்தி வெளியீடு

தமிழகத்தில் உள்ள 164 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள இளநிலை பட்டப்படிப்பு முதலாமாண்டு மாணாக்கர் சேர்க்கைக்கான (2023-2024) விண்ணப்பங்களை www.tngasa.in என்ற இணையதள முகவரியில் பதிவு செய்யலாம்.

இணையதள வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணாக்கர்கள் கல்லூரி உதவி மையங்கள் (Admission Facilitation Centre - AFC) மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களின் பட்டியல் மேற்குறித்த இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது.

| விண்ணப்பக் கட்டண விவரம் | |
|---|---|
| (ஒவ்வொரு ஐந்து கல்லூரிகளுக்கும்)<br>விண்ணப்பக் கட்டணம் - ரூ.48/-<br>பதிவுக் கட்டணம் - ரூ.2/- | SC/ST பிரிவினருக்கு விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை<br>பதிவுக் கட்டணம் - ரூ.2/- மட்டும் |

விண்ணப்பம் மற்றும் பதிவுக் கட்டணம்: விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்தை விண்ணப்பதாரர்கள் Debit Card/ CreditCard/ Net Banking மூலம் இணையதள வாயிலாக செலுத்தலாம். இணையதள வாயிலாகக் கட்டணம் செலுத்த இயலாத மாணாக்கர்கள் கல்லூரி சேர்க்கை உதவி மையங்களில் "The Director, Directorate of Collegiate Education, Chennai – 15" என்ற பெயரில் 08/05/2023 அன்று அல்லது அதற்குப் பின்னர் பெற்ற வங்கி வரைவோலை அல்லது நேரடியாகவும் செலுத்தலாம். மாணாக்கர் சேர்க்கை வழிகாட்டி மற்றும் கால அட்டவணையை மாணாக்கர்கள் மேற்குறித்த இணையதளங்கள் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

| | |
|---|---|
| இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்யத் துவங்கும் நாள் | 08.05.2023 |
| இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய இறுதி நாள் | 10.05.2023 |

தொடர்பு எண் : 1800 425 0110




இந்திய அளவில் சிறந்த அறிவியல் கல்லூரிகளில் படிக்க, அகில இந்திய நுழைவுத் தேர்வுகள் (ALL INDIA ENTRANCE EXAMS FOR COURSES IN SCIENCES) நடத்தப்படுகின்றன. அவை என்னவென்று பார்ப்போம்.

## 1. பி.எஸ்.சி. ஆனர்ஸ் நுழைவுத்தேர்வு

**(B.Sc. (Hons.) Entrance Examination)**

கல்வி நிறுவனம்: சென்னை மேத்மேட்டிக்கல் இன்ஸ்டிட்யூட் (CMI), சிறுசேரி, சென்னை.



படிப்புகள்: பி.எஸ்.சி. (ஆனர்ஸ்) கணிதம் மற்றும் கம்ப்யூட்டர் சயின்ஸ்; பி.எஸ்சி (ஆனர்ஸ்) கணிதம் மற்றும் இயற்பியல்

படிப்புக்காலம்: 3 ஆண்டுகள். நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு: தேசிய அளவில் நடத்தப்படும் அறிவியல் ஒலிம்பியாட் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கும் பிற மாணவர்களுக்கும் நுழைவுத்தேர்வுகள் கட்டாயம். விவரங்களுக்கு: www.cmi.ac.in

எளிய குடும்பங்களைச் சார்ந்த மாணவியர் உயர்கல்வி பயிலுவதை உறுதிசெய்யும் வகையில் மாதந்தோறும் ரூபாய் 1,000 வங்கிக் கணக்கில் செலுத்துவதே புதுமைப்பெண் திட்டம்.

## புதுமைப்பெண் திட்டம்

அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கும் விரிவாக்கம்

வரும் கல்வியாண்டு முதல் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் பயிலும் மாணவிகளும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்படும்.

தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட் 2024 - 25





### 1. நெஸ்ட் நுழைவுத் தேர்வு

National Entrance Screening Test- NEST

கல்வி நிறுவனங்கள்: நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ் எஜுகேஷன் ரிசர்ச் (NISER), புவனேஸ்வரம்; சென்டர் ஃபார் எக்ஸலன்ஸ் இன் பேசிக் சயின்சஸ் (Science CEBS), மும்பை

படிப்புகள்: ஒருங்கிணைந்த எம்.எஸ்சி. உயிரியல், வேதியியல், இயற்பியல், கணிதம்

படிப்புக்காலம்: 5 ஆண்டுகள்

விவரங்களுக்கு: www.nestexam.in



**3. பி.எஸ்சி. படிக்க நுழைவுத் தேர்வு** (Bachelor of Science Entrance Test)

கல்வி நிறுவனம்: இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ் (IISc), பெங்களூரு

படிப்புகள்: பி.எஸ்சி உயிரியல், வேதியியல், எர்த் அண்ட் என்விரான்மெண்டல் சயின்ஸ், மெட்டீரியல்ஸ், கணிதம், இயற்பியல்

படிப்புக்காலம்: 4 ஆண்டுகள். தேர்வு முறை: (கீழ்க்காணும் ஏதாவது ஒரு தேர்வில் தகுதி பெற்றிருக்க வேண்டும்!

ஜேஇஇ மெயின் (JEE-Main)

ஜேஇஇ அட்வான்ஸ்ட் (JEE-Advanced நீட் (NEET-UG)

படிப்புகள்: பி.டெக். மேத்ஸ் அண்ட் கம்ப்யூட்டிங்

படிப்புக்காலம்: 4 ஆண்டுகள்

தேர்வு முறை: ஜேஇஇ அட்வான்ஸ்டு (JEE-Advanced)

விவரங்களுக்கு: www.iisc.ac.in

**4. ஐந்து ஆண்டு டியூயல் டிகிரி திறனறித் தேர்வு** (IISER Aptitude Test)

கல்வி நிறுவனம்: இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ் எஜுகேஷன் அண்ட் ரிசர்ச் (IISER) - பெர்ஹாம்பூர், போபால், கொல்கத்தா, மொஹாலி, புனே, திருவனந்தபுரம், திருப்பதி

படிப்புகள்: பிஎஸ்-எம்எஸ் (ஒருங்கிணைந்த படிப்பு) உயிரியல், வேதியியல், எர்த் அண்ட் என்விரான்மெண்டல் சயின்ஸ், மெட்டீரியல்ஸ், கணிதம், இயற்பியல்

படிப்புக்காலம்: 5 ஆண்டுகள்

தேர்வு முறை: 25 சதவீத இடங்கள்

ஜேஇஇ அட்வான்ஸ்டு (JEE-Advanced)

75 சதவீத இடங்கள்: திறனறித்தேர்வு

விவரங்களுக்கு: www.iiser-admissions.in

(திருவனந்தபுரத்தில் செயல்படும் Indian Institute of Science Education and Research நிறுவனத்தில்)

புதிதாக ஐந்து BS–MS – Integrated & Interdisciplinary Courses அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

Biological Sciences

Chemical Sciences

Data Sciences

Mathematical Sciences

Physical Sciences

www.iisertvm.ac.in

5. **இந்தியன் ஸ்டாட்டிஸ்டிக்கல் இன்ஸ்டிட்யூட்** (ISI)

கொல்கத்தா, பெங்களூரு

படிப்புகள்: பி.ஸ்டாட் (ஆனர்ஸ்) - கொல்கத்தா,

பி.மேத் (Honors) – பெங்களூரு

படிப்புக்காலம்: 3 ஆண்டுகள்

நுழைவுத் தேர்வு Indian Statistical Institute நடத்தும் Admission Test இல் தேர்ச்சி பெற வேண்டும்

விவரங்களுக்கு: www.isical.ac.in



6. **நாட்டிக்கல் சயின்ஸ்** (Nautical Science Entrance Test)

கல்வி நிறுவனம்: Central Institute of Fisheries Nautical and Engineering Training - கொச்சி, சென்னை ராயபுரம், விசாகப்பட்டினம்.

படிப்பு: B.F.Sc (நாட்டிக்கல் சயின்ஸ்)

படிப்புக்காலம்: 3 ஆண்டுகள்

நுழைவுத் தேர்வு Nautical Science Entrance Test

விவரங்களுக்கு: www.cifnet.gov.in



7. Indian Institute of Technology Madras (IIT)

படிப்பு: பிஎஸ்-எம்எஸ் (ஒருங்கிணைந்த படிப்பு) உயிரியல், இயற்பியல் நுழைவுத் தேர்வு - JEE (Advanced



8. National Institute of Fashion Technology (NIFT), Chennai, இளங்கலைப் படிப்புகள்:

Fashion Design , Leather Design , Knit Wear,

Textile Design, Fashion Communication, B.FTech

பட்டயப் படிப்புகள்

Diploma in Fashion Fit & Style (2 years)

Diploma in Textile CAD (2 years)

Fashion & Retail Store Operations (2 years)

PG Diploma in Apparel Production & Merchandising (1 year)

PG Diploma in Footwear Design & Production Technology (1 year)

விவரங்களுக்கு - – www.nift.ac.in/chennai



9. Tamil Nadu Sports University

படிப்பு: Bachelor of Physical Education , B.Sc in Yoga,

விவரங்களுக்கு - www.tnpesu.or

**உன்னை உலகிற்குச் சொல்! வெளிச்சம் பரப்பு!**
**ஊடகவியல் படிப்புகளும் வாய்ப்புகளும்!**

- பீர் முகமது அஜீஸ்

ஒரு சமூகம் தன்னோடு உரையாடுவதற்கான ஜனநாயகக் கலைதான் ஊடகவியல். தகவல்கள் தடையின்றி, சுதந்திரமாகப் பயணிக்கும் சமூகம் பசியிலிருந்து விடுதலையடைகிறது; கல்வியைத் தன்வசமாக்குகிறது; உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைகிறது; உயர்கல்வியில் சிகரம் தொடுகிறது; தனது கனவுகளைக் கட்டி எழுப்புகிறது. தமிழ்ச் சமூகம் இவ்வாறே உயர்ந்து நிற்கிறது. நீங்கள் எழுதுவதில், படம் வரைவதில், நடிப்பில், பேசுவதில், காணொலியைத் திருத்துவதில், பாடுவதில் ஆர்வமாக இருக்கிறீர்களா? இன்ஸ்டாவிலும் பிற சமூக வலைத்தளங்களிலும் எப்போதும் வீடியோ செய்து போடுகிறீர்களா? கருத்துச் சொல்வதிலும் கதை எழுதுவதிலும் தீவிரமாக இருக்கிறீர்களா? ஊடகவியல் படிப்புகள் உங்களை வரவேற்கின்றன.

கல்லூரிகளில் இளங்கலை இதழியல் படிப்பு அல்லது இளம் அறிவியல் காட்சித் தகவலியல் படிப்புகளைத் தெரிவு செய்யலாம். பட்டம் பெற்ற பின்னர் தமிழ்நாட்டின் அரசுப் பல்கலைக்கழகங்களிலுள்ள தொடர்பியல் முதுகலைப் படிப்புக்குச் சேரலாம்.

இந்தியாவிலேயே பிபிசி, டாய்ச் வெல்லா, தாம்ஸன் ராய்ட்டர்ஸ் போன்ற பன்னாட்டு ஊடக அமைப்புகளில் வாய்ப்புகள் இருக்கின்றன. இவற்றுக்கு ஆங்கிலம், ஜெர்மனி முதலிய பிற மொழிப் புலமை தேவைப்படுகிறது. சென்னையில் ஏசியன் காலேஜ் ஆஃப் ஜர்னலிஸம், தமிழ்நாட்டுக்கு வெளியே கோட்டயத்தில் மனோரமா தொடர்பியல் பள்ளி, புனேயில் சிம்பயாஸிஸ் ஊடக மற்றும் தொடர்பியல் கல்வி நிறுவனம், மணிப்பால் தொடர்பியல் பள்ளி, புது டெல்லியில் ஒன்றிய அரசின் இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் மாஸ் கம்யூனிகேஷன், இந்தியா டுடே குழுமத்தின் ஊடகக் கல்வி நிறுவனம், டைம்ஸ் ஆஃப் இந்தியா குழுமத்தின் பென்னட் பல்கலைக்கழகம் முதலானவை பட்டப் படிப்புக்குப் பிறகான ஊடகப் படிப்புகளை வழங்குகிறார்கள். அமெரிக்காவில் அரிசோனா ஸ்டேட் பல்கலைக்கழகம், நியூயார்க்கில் கொலம்பியா பல்கலைக்கழகம், நியூயார்க் பல்கலைக் கழகம் ஆகிவை ஊடகவியலில் முக்கிய படிப்புகளை வழங்குகிறார்கள். திருவாரூரில் தமிழ்நாடு மத்திய பல்கலைக் கழகமும் பாண்டிச்சேரி மத்திய பல்கலைக் கழகமும் ஊடகவியல் படிப்புகளை வழங்குகின்றன. இவற்றுக்கான நுழைவுத் தேர்வுகள் அனைத்துமே சமகால நிகழ்வுகளைப் பற்றிய உங்கள் அறிதலைச் சோதிப்பவைதான். உங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் பற்றி விழிப்போடு இருங்கள். உங்கள் ஊடகக் கனவு மெய்ப்படும்.

(பீர் முகமது அஜீஸ் ஊடகவியலாளர்; இலக்கியத் தூதுவர். தொடர்பு: peer@ippodhu.com, +919884360505)

# வணிகவியல் மாணவர்களுக்கான தொழில்முறைப் படிப்புகள்

இந்தியத் தொழில்முறை படிப்புகளுக்குப் 3 முக்கியத் தெரிவுகள் உள்ளன:

| எண் | பெயர் | | நிறுவனம் | இணையதளம் | முக்கிய செயல்பாடுகள் |
|---|---|---|---|---|---|
| 1 | CA | பட்டயக் கணக்காளர் | ICAI - இந்திய பட்டய கணக்காளர்கள் நிறுவனம் | www.icai.org | 1. தணிக்கைச் செயல்பாடுகள்<br>2. வருமான வரி<br>3. கணக்கியல் / கணக்கீடு செயல்பாடுகள் |
| 2 | CMA (முன்னர் ICWA என அறியப்பட்டது) | செலவு மற்றும் மேலாண்மை கணக்காளர் | ICMAI - இந்திய செலவு மற்றும் மேலாண்மை கணக்காளர் நிறுவனம் | www.icmai.in | 1. செலவு தணிக்கை<br>2.மேலாண்மை / நிர்வாக ஆலோசனை |
| 3 | CS | நிறுவனச் செயலாளர் | ICSI - இந்திய நிறுவனச் செயலாளர்கள் நிறுவனம் | www.icsi.edu | நிறுவனங்கள் சட்ட இணக்கம் |

**1. குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தொழில்முறைப் படிப்புகளுக்குமான பொதுப் பாட அமைப்பு**

1. அடித்தளம் / நுழைவுநிலைத் தேர்வு (Foundation/ Entry Level Exam)
2. இடைநிலை நிலைத் தேர்வு (Intermediate Level Exam)
3. நடைமுறைப் பயிற்சி (Practical Training)
4. இறுதி நிலைத்தேர்வு (Final Exam)

**2. பட்டய கணக்கியலுக்கான (CA) விரிவான பாடநெறி அமைப்பு**

**1A. வழி - I அடித்தள நிலை (Foundation Level)** - இது பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு எழுதியுள்ளோருக்கான CA படிப்புக்கான நுழைவு முறை

1B வழி - II நேரடி நுழைவு முறை (Direct Entry) - ICAI ஆனது அதன் இடைநிலைப் படிப்பில் சில விண்ணப்பதாரர்களான வணிகவியல் பட்டதாரிகள்/முதுகலைப் பட்டதாரிகள் (குறைந்தபட்சம் 55% மதிப்பெண்களுடன்) மற்றும் இதர பட்டதாரிகள்/ முதுகலை பட்டதாரிகள் (குறைந்தபட்சம் 60% மதிப்பெண்களுடன்) நேரடியாக நுழைய அனுமதிக்கிறது.

Others - Tnsdc Kalluri Kanavu_(TM)_Samba Publishing Company

2. **இடைநிலைப் படிப்பு (Intermediate Course) -**
   - 8 மாத கால படிப்பிற்கு பிறகு இடைநிலைத் தேர்வில் தோன்றி, இடைநிலைத் தேர்வின் இரு தேர்வுக்குழுக்களிலும் தேர்ச்சி பெற வேண்டும்
   - தகவல் தொழில்நுட்பம் மற்றும் மென்திறன்கள் (ICITSS) பற்றிய ஒருங்கிணைந்த படிப்பை முடிக்கவேண்டும்
3. **நடைமுறைப் பயிற்சி (Practical Training)** - ஏதேனும் ஒரு CA நிறுவனம் அல்லது பட்டயக் கணக்காளரிடம் இரண்டு வருட நடைமுறைப் பயிற்சியை முடிக்கவேண்டும்.

   இந்தக் கட்டத்தில் வணிகக் கணக்கியல் இணையர் (BAA) சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம், இது CA -வின் அரைத் தகுதி அல்லது பொதுவாக CA இன்டர் (Inter) எனப்படும்.
4. **இறுதி (Final)** - நடைமுறைப் பயிற்சியை (PT) முடித்த ஆறு மாதங்களுக்குப் பிறகு இறுதித் தேர்வில் தோன்றி இறுதித் தேர்வின் இரு தேர்வுக்குழுக்களிலும் தேர்ச்சி பெறவேண்டும்

### 3. தொழில் / வேலை வாய்ப்புகள்

- பயிற்சி (Practice) - CA தனது சொந்த அலுவலகத்தை நிறுவலாம் அல்லது நடைமுறையில் உள்ள மற்ற CA நிறுவனங்களில் சேரலாம்
- வேலைவாய்ப்பு (Employment) - CA க்கள் பன்னாட்டு நிறுவனங்கள், நிதித் துறைகளில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களில் பணியமர்த்தப்படுகின்றனர்.
- பிக் 4 (Big 4) - KPMG, இயேனஸ்ட் அண்ட் யங் (EY), டீலாய்டே அண்ட் ப்ரைஸ் வாட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் (PwC) ஆகியவை சர்வதேச அளவில் விரிவான செயல்பாடுகளைக் கொண்ட கணக்கியல் மற்றும் தணிக்கைத் துறையின் 'பிக் 4' என்று அறியப்படுகின்றன.

### 4. அரசு வேலை வாய்ப்புகள்

- மத்திய அரசு -
  - SSC பட்டதாரி நிலை தேர்வு - உயர்நிலைப் பதவியான உதவிக் கணக்கு அதிகாரி பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.
  - UPSC - உதவி இயக்குநர் (Cost), நிதி அமைச்சகம்
  - பொதுத்துறை நிறுவனங்கள் - CA, CMA அல்லது CS -களை நேரடி நியமனம் செய்கிறது
- மாநில அரசு -
  - TNPSC - கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறை, மற்றும் TN பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள கணக்கியல் துறைகளில் கணக்கு அதிகாரி போன்ற துறைகளில் வேலைவாய்ப்புகள் உள்ளன.
  - TN பொதுத்துறை நிறுவனங்கள் - CA, CMA அல்லது CS -களை நேரடி நியமனம் செய்கிறது.

# கலைப் படிப்புகளுக்கு வேலை கொட்டிக்கிடக்கு.. அவற்றுள் சில...

- Anthropologist
- Archaeologist
- Curator
- Economist
- Editor
- Geographer
- Historian
- Language Trainer
- Philosopher
- Political Scientist
- Psychologist
- Restorer
- Social Worker
- Sociologist
- Teacher
- Translator
- Writer
- Business Manager-Analytics
- Business Analyst
- Economics Business Analyst
- Manager-Medical Economics
- Business/Finance-Business
- Economics Associate
- Economics Business Manager
- Analyst-Business Planning&Finance
- Sr.Analyst-Business Analytics
- Marketing Officer
- Sales Officer
- Customer Care Officer
- Consumer Relationship Executive
- Business Develpoment Executive
- Manager - Credit Union
- Customer Service Advisor
- Assistant Manager
- Junior officer
- Executive Assistant
- Corporate Counsel & Corporate Secretary

## இயற்பியல் துறையில் உள்ள வேலை வாய்ப்புகள்

Indian Meteorological Department

Scientific Assistant at research centers

Radiological Safety officer

Lab Product designing companies (eg - telescope)

Climatologist, Environmental Scientist

## வேதியியல் துறையில் உள்ள வேலை வாய்ப்புகள்

Sanitary Inspector, Forensic expert

Chemical engineer

Toxicologists

Waste management professional

Quality control chemist

Biochemist, Pharmacologist

Food safety professional

## தாவரவியல் துறையில் உள்ள வேலை வாய்ப்புகள்

Biotechnologist

Molecular Biologist

Computational Biologist

Nursery Manager

Plant Geneticist

Field Botanist

Scientific Assistant

Researcher

Professor Plant Pathologist

Ecologist, Plant Biochemist

Taxonomist

## விலங்கியல் துறையில் உள்ள வேலை வாய்ப்புகள்

Animal Nutritionist

Ecologist

Wildlife conservationist

Wildlife educators

National park / Wildlife Sanctuary Manager

Animal Breeders

Environmental consultant

Marine Biologist

Scientific writer

Researchers

## கணிதத் துறையில் உள்ள வேலை வாய்ப்புகள்

Statistician

Mathematician

Data Scientist

Business Analyst

Actuary

Chartered Accountant

Investment Banker

Data Scientist, Data Analyst

Big Data Analyst

Software engineer

BlockChain Developer

Economist



# பொறியியல் படிப்புகள்

B.Tech. (Bachelor of Technology) - 4 ஆண்டுகள்

B.E. (Bachelor of Engineering) - 4 ஆண்டுகள்

B.FTech. (Bachelor of Fashion Technology)- 4 ஆண்டுகள்

B.Arch. (Bachelor of Architecture) - 5 ஆண்டுகள்

B.Plan (Bachelor of Planning) - 4 ஆண்டுகள்

B.I.D (Bachelor of Interior Design) - 4 ஆண்டுகள்

B.Des. (Bachelor of Design) - 4 ஆண்டுகள்



SUNDAR PICHAI
CEO, Google and Alphabet

உலகின் சக்தி வாய்ந்த மனிதராக அறியப்படும் சுந்தர் பிச்சையைப் பற்றித் தெரியாதவர்கள் மிகச் சொற்பம். நாம் அன்றாடம் உபயோகிக்கும் கூகுல் குரோமை (Google Chrome) தயாரிப்பதில் முக்கியப் பங்கு வகித்தவர். இவர் IIT Kharagpurஇல் B Tech பயின்றவர்



உயர்கல்வியைத் தொடர விரும்பும் மூன்றாம் பாலினத்தவரின் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து கல்விச் செலவுகளையும் அரசே ஏற்கும். திருநங்கைகள் நல வாரியம் மூலம் நடைமுறைப் படுத்தவிருக்கும் இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு 2 கோடி ரூபாய் கூடுதலாக அரசால் வழங்கப்படும்.

மூன்றாம் பாலினத்தோரின் கல்லூரிப் படிப்புக்கான முழுச் செலவையும் அரசே ஏற்கும்

தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட் 2024 – 25

மேலும் விவரங்களை அறிய இந்த இணையதளத்தைப் பயன்படுத்தவும்
www.naanmudhalvan.tnschools.gov.in/main/categories/colleges

"எவ்வளவு கட்டடங்கள் கட்டினாலும், விஞ்ஞானக் கூடங்கள் அமைத்தாலும், புதுப் பூங்கா அமைத்தாலும் கல்விச் செல்வம் இல்லாவிடில் அவற்றால் பயன் இல்லை."

- அறிஞர் அண்ணா



## பட்டங்களைப் பார்த்தாச்சு! வருங்காலப் பொறியியலாளர்களே.. பொறியியல் துறையில் எத்தனை எத்தனை படிப்புகள் இருக்கின்றன தெரியுமா?

**Bachelor of Engineering (BE)**

- Mechanical Engineering
- Computer science Engineering
- Civil Engineering
- Electrical and Electronic Engineering
- Information Technology (IT)
- Automobile Engineering
- Electronics and Communication Engineering
- Industrial Engineering
- Metallurgy Engineering
- Sound Engineering
- Chemical Engineering
- Instrumentation Engineering
- Mechatronics Engineering
- Manufacturing and Production Engineering
- Robotics and Automation Engineering
- Nanotechnology (B.tech) Engineering
- Petroleum Technology
- Aeronautical Engineering
- Astronautical Engineering
- Agriculture Engineering
- Architecture Engineering
- Bio-medical Engineering
- Bio-Technology Engineering
- Marine Engineering
- Ocean Engineering
- Mining Technology
- Leather Technology
- Textile Technology
- Plastic and Polymer Technology
- Rubber Technology
- Food science and Technology
- Ceramic Engineering
- Design Engineering
- Naval Architecture Engineering



MAYILSAMY ANNADURAI

"இந்திய விண்வெளித்துறையில் பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர் மயில்சாமி அண்ணாதுரை. ஏழ்மையைக் கல்வியால் துடைத்தெறிந்து சாதித்த மயில்சாமி, பொறியியல் கற்றது கோவையில்."

## அண்ணா பல்கலைக்கழகச் சேர்க்கை முறை

- அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள மொத்தப் பொறியியல் கல்லூரிகள் - 485
- எல்லாக் கல்லூரிகளுக்கும் ஒரே ஒரு விண்ணப்பத்தின் மூலம் சேர்க்கை நடைபெறுகிறது
- ஒற்றைச் சாளர முறை Single Window Counselling என்பது 12ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் கல்லூரிகளையும் துறைகளையும் தேர்ந்து எடுப்பது. அதற்கான விண்ணப்பம் (application) TNEA இணையத்தளத்தில் கிடைக்கும்.

## TNEA 2024 விண்ணப்பப் படிவம்

- TNEA 2024 விண்ணப்பப் படிவம் ஆன்லைனில் மட்டுமே வெளியிடப்படுகிறது. தகுதியான விண்ணப்பதாரர்கள். ஆன்லைனில் மாநில அளவிலான கவுன்சிலிங்கிற்குப் பதிவு செய்யலாம். இணையத்தளத்தில் கிடைக்கும் ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தைத் தவிர, தேர்வர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் நிறுவப்பட்டுள்ள TNEA வசதி மையங்களுக்கும் (TFC) சென்று அங்குள்ள பிரதிநிதியின் உதவியுடன் விண்ணப்பப் படிவத்தை நிரப்பவும்.

2021-22 ஆம் ஆண்டு பொறியியல், வேளாண்மை உள்ளிட்ட தொழிற்படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீதம் உள் ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் மாணவர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் என அவர்களின் மொத்தக் கல்விச் செலவையும் முழுமையாக அரசே ஏற்றுக்கொள்கிறது.

7.5% உள் ஒதுக்கீட்டில் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் படிப்புக்கான முழுச் செலவையும் அரசே ஏற்கும்.

தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட் 2024 - 25



தாங்களாகவே ஆன்லைனில் படிவத்தை நிரப்பும் விண்ணப்பதாரர்கள் TNEA 2024 கவுன்சிலிங்கிற்கு விண்ணப்பிப்பதற்கான படிநிலைகளைக் கீழே பார்க்கலாம்:

1. **பதிவு:** கேட்கப்பட்ட விவரங்களை அளித்து பதிவு செய்யவும்
2. **உள்நுழைவு:** வெற்றிகரமாகப் பதிவு செய்யும் விண்ணப்பதாரர்களுக்குப் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை உள்ளடக்கிய உள்நுழைவு விவரங்கள் வழங்கப்படும்
3. **ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தை நிரப்பவும்:** விண்ணப்பதாரர்கள் 7 பகுதிகளைக் கொண்ட ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். அதில் ஒரு பகுதி விண்ணப்பக் கட்டணம் செலுத்துவது.
4. **ஆன்லைன்படிவத்தைமுன்னோட்டமிட்டுச்சமர்ப்பிக்கவும்:**விண்ணப்பதாரர்கள் இறுதிச் சமர்ப்பிப்புக்கு முன் படிவத்தை ஒருமுறை கவனமாக முன்னோட்டமிடலாம்.
5. **ஆன்லைன் படிவத்தைப் பதிவிறக்கவும்:** இறுதியாகச்சமர்ப்பித்த பிறகு ஆன்லைன் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யலாம். விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்த நகலைத் தங்களிடம் வைத்திருக்க வேண்டும்.



அரசுப் பள்ளி மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடும் பொருட்டு, அரசு பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அந்த வரிசையில், அரசுப் பள்ளி மாணவர்கள் தங்களது பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை வெளிநாடுகளில் உள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் பயின்றிட உதவித்தொகை அளித்து உதவும் வகையில், ஒரு புதிய திட்டம் வரும் ஆண்டு அறிமுகப்படுத்தப்படும்.

பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை வெளிநாடுகளில் பயின்றிட உதவித்தொகை

தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட் 2024 – 25

## ஐஐடி - Indian Institute of Technology (IIT)
## (இந்தியத் தொழில்நுட்பக் கழகம்)




IIT கல்வி நிறுவனங்களில் பொறியியல் படிப்பில் சேருவதற்கு IIT–JEE Advanced (Joint Entrance Examination) என்ற நுழைவுத் தேர்வை எழுத வேண்டும்.

முதுகலைப் பொறியியல் படிக்க வேண்டுமெனில் GATE, JMET, JAM மற்றும் CEED போன்ற நுழைவுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றால் போதும்..

இந்தியாவில் உள்ள இருபத்துமூன்று(23) IITகளில் சென்னையில் உள்ள IIT Madras முதலிடத்தில் உள்ளது.

பன்னிரண்டாம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு "BS Degree in Data Science and Applications" என்கிற நான்காண்டு பட்டப்படிப்பை IIT Madras நுழைவுத் தேர்வு எதுவுமின்றி வழங்குகிறது. இது முற்றிலும் இணைய வழியிலான (Online) படிப்பாகும்.

## என்.ஐ.டி - National Institute of Technology (NIT)
## (தேசிய தொழில்நுட்பக் கழகம்)

இந்தியாவில் உள்ள முப்பத்தொரு(31) NITகளுள் ஒன்று திருச்சிராப்பள்ளியில் உள்ளது.

இவற்றில் சேர்ந்து B.Tech பாடப்பிரிவுகளைப் படிக்க JEE Main என்ற நுழைவுத் தேர்வில் அகில இந்திய அளவில் மதிப்பெண்களைப் பெற்றால் போதுமானது.




"ஒரு பெண்ணிற்குக் கல்வி புகட்டுவது ஒரு குடும்பத்திற்கே கல்வி தருவதாகும்"

-கர்மவீரர் காமராஜர்



# நுழைவுத் தேர்வுகள்



12ஆம் வகுப்பு முடித்தவுடன் பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று, 12ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் சேர்வது. மற்றொன்று, சில நுழைவுத் தேர்வுகள் எழுதி, அதனடிப்படையில் சேர்வது. அப்படி என்னென்ன நுழைவுத் தேர்வுகள் இருக்கின்றன? வாங்க பார்க்கலாம்!



1. நுழைவுத் தேர்வு – Mains (Joint Entrance Examination - Main) - www.jeemain.nta.ac.in

2. நுழைவுத் தேர்வு -Advanced (Joint Entrance Examination (JEE) – Advanced) - www.jeeadv.ac.in



3. கட்டட வடிவமைப்புப் படிப்பிற்கான தேசியத் திறனறித் தேர்வு (National Aptitude Test in Architecture – NATA) – www.nata.in

4.கடல்சார் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வு (Common Entrance Test – CET) – www.imu.edu.in

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

கலைஞர் மு.கருணாநிதி உரை: பிழை இல்லாதவற்றைத் தனது குறைகள் நீங்குமளவுக்குக் கற்றுக்கொள்ள வேண்டும். கற்ற பிறகு, அதன்படி நடக்கவேண்டும்.



தேசிய அளவிலான பல்வேறு நுழைவுத் தேர்வுகளுக்குப் பயன்படும் வகையில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், பியர்சன் நிறுவனத்தோடு இணைந்து, 'உயர்கல்வி நுழைவுத் தேர்வு நூல் வரிசை' என 6 வினா வங்கிகளை வெளியிட்டுள்ளது. இவை தமிழிலும் ஆங்கிலத்திலும் கிடைக்கின்றன.

கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் பணியில் சேருவதற்கு அவர்களைத் தயார்படுத்தும் வகையில் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் திறன் பயிற்சிகளை அரசு வழங்கி வருகிறது.

இவற்றில், கட்டணமில்லாமல் கல்லூரிப் பாடத்திட்டத்துடன் சில பயிற்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. குறைந்த கட்டணத்துடன் சில பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

அவற்றுள் சில...





1. Architecture Visualization using AR/VR
2. Block Chain Development
3. Design of Photo Voltaic system for Domestic Load
4. Digital Marketing
5. Electric Vehicle Charging System Design
6. Embedded System Design – Process Board Design
7. Embedded System Design – Industrial Application
8. Embedded System Design & Application
9. EV Design
10. Full Stack
11. Industrial metaverse using mixed reality (XR)
12. Manufacturing of Mechanical Components using CNC Turning/Milling
13. Product Design Engineering and Modeling
14. Network Engineering
15. Network Essentials











மேலும் விவரங்களுக்கு www. naan mudhalvan.tn.gov.in

## பொறியியல் படிப்பிற்கான சில வேலை வாய்ப்புகள்

படிக்கறது எதுக்கு...? அறிவும் வளரணும் வேலையும் கிடைக்கணும்.. B.E படிச்சா வேலைக்குப் பஞ்சமில்ல...

Engineer, Scientist, Architect,

Commercial Pilot, Astronaut, Naval Officer,

Automobile Designer, Town Planner

### தனியாருக்கு நிகராக அரசு வேலையும் இருக்கு.! அரசு வேலை வாய்ப்புகள்

இந்திய ரயில்வே

விமானப்படை

ராணுவம்

கடற்படை

மின்சாரத்துறை

அணைகள் பாதுகாப்பு

பொதுப்பணித் துறை

தேசிய நெடுஞ்சாலைத் துறை

மாநில நெடுஞ்சாலைத் துறை

இந்தியத் தகவல் தொடர்புத் துறை

விமானப் போக்குவரத்துத் துறை


இஸ்ரோ

மத்திய மாநில நீர்வழித்துறை

துறைமுகங்கள்

### அரசின் பிற வேலை வாய்ப்புகள்

1. IES - Class 1 Officer under Government of India through UPSC
2. CDS - Combined Defence Service
3. SSC - Staff Selection Commission - Junior Engineer
4. RRB - In Construction and Management Department
5. Civil Aviation Department - Join by Exam Conducted by Airport Authority of India
6. PSU - CIL, NTPC, ONGC, HPCL, CALCO, IOCL, SAIL, ISRO, DMRC, HECL,DDA, ECIL, OPGC, DGVCL, RPSC
7. Ship Building Companies, Aeronautical Companies




# மருத்துவப் படிப்புகள்

**மேல்நிலைப் பள்ளிகளில் உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடப்பிரிவை எடுத்துப் படிக்கும் மாணவர்கள் மருத்துவப் படிப்புகளில் சேரலாம்.**

# எம்.பி.பி.எஸ்.

ஐந்தரை ஆண்டுப் படிப்பு இது. எம்.பி.பி.எஸ். படித்து முடித்து மருத்துவப் பயிற்சியை முடித்த பிறகு, இந்திய மருத்துவக் கவுன்சிலில் பதிவு செய்த பிறகே மருத்துவராகப் பணிபுரிய முடியும்.

எம்.பி.பி.எஸ். படித்த மாணவர்களுக்கு, மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் 2012 (MRB) நடத்தும் தேர்வில் தேர்ச்சிபெறும் மாணவர்கள் அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் மருத்துவராகலாம். அதேபோல, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு மூப்பு அடிப்படையிலும் அரசு வேலைவாய்ப்பைப் பெற முடியும். இது தவிர மத்திய அரசுத் தேர்வாணையம் எம்.பி.பி.எஸ்.மாணவர்களுக்காகச் சிறப்புத் தேர்வை நடத்துகிறது. இந்தத் தேர்வில் தேர்ச்சிபெறும் மாணவர்கள், பாதுகாப்புத் துறை, ரயில்வே துறைகளில் மருத்துவராகப் பணிபுரிய முடியும். சொந்தமாக மருத்துவமனை வைத்தும் நடத்தலாம். இதுதவிர, மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்கள் மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களில் வேலை கிடைக்கும்.

## மருத்துவப் படிப்புகள்

மேல்நிலைப் பள்ளிகளில் உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடப்பிரிவை எடுத்துப் படிக்கும் மாணவர்கள் மருத்துவப் படிப்புகளில் சேரலாம்.



## அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 இட ஒதுக்கீடு

அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு ஒவ்வொரு அரசு மருத்துவக்கல்லூரியிலும் 7.5% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. 200 இடங்கள் இருக்கும் ஒரு கல்லூரியில் 15 இடங்கள் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மட்டுமே! சென்ற வருடம் MBBS இல் 455 இடங்களும் BDS இல் 114 இடங்களும் அரசுப் பள்ளி மாணவர்களால் நிரப்பப்பட்டன.

## நுழைவுத் தேர்வுகளுக்கான வினா வங்கிகள்

தேசிய அளவிலான பல்வேறு நுழைவுத் தேர்வுகளுக்குப் பயன்படும் வகையில் தமிழ்நாடு பாட நூல் கழகம், 'உயர்கல்வி நுழைவுத் தேர்வு நூல் வரிசை' என 6 வினா வங்கிகளை வெளியிட்டுள்ளது.



## பல் மருத்துவம்

பயிற்சிக் காலத்துடன் சேர்த்து மொத்தம் ஐந்து ஆண்டுப் படிப்பு இது. பல் மருத்துவச் சிகிச்சை மட்டுமல்லாமல், பல்லை அழகுபடுத்துதல் போன்ற பணிகளுக்கும் பல் மருத்துவரின் தேவை இருக்கிறது. பல் மருத்துவப் படிப்பைப் படித்து முடித்த மாணவர்கள் பல் மருத்துவக் கவுன்சிலில் பல் மருத்துவராகப் பதிவுசெய்ய வேண்டும். பல் மருத்துவர்களுக்கு மருத்துவமனைகளில் வேலை கிடைக்கும். குறிப்பிட்ட கால அனுபவத்திற்குப் பிறகு சொந்தமாகப் பல் மருத்துவமனை வைத்து நடத்தலாம். பல் மருத்துவத்திற்குத் தேவையான பொருட்களைத் தயார் செய்யும் நிறுவனங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள், மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களில் பணிகளில் சேர முடியும். பாரா டெண்ட்டல் மெடிக்கல், டெண்ட்டல் மெட்டீரியல் அண்ட் ஓரல் ஹைஜீன், டெண்ட்டல் டெக்னீசியன் போன்ற பல்வேறு பிரிவுகளில் டிப்ளமோ படிப்புகளிலும் பிளஸ் டூ மாணவர்கள் சேரலாம்.

## இலவசமாக எம். பி. பி. எஸ்.

பூனேயில் உள்ள இராணுவ மருத்துவக் கல்லூரியில் இலவசமாக எம்.பி.பி.எஸ். படிக்கலாம். இங்கு இடம் கிடைத்து விட்டால் போதும் கையிலிருந்து பணம் செலவழிக்க வேண்டியதில்லை. விடுதியில் இலவசமாகத் தங்கிப் படிக்கவும் விடுமுறையில் ஊருக்குச் சென்று வரவும், புத்தகங்கள் வாங்கவும், எழுதுபொருட்கள் வாங்கவும் சீருடை வாங்கவும், அந்த உடைகளைச் சலவை செய்யவும், முடிவெட்டவும் அலவன்ஸ் வழங்கப்படும்.

## செவிலியம்

மருத்துவப் பணியைப் போலவே செவிலியர் பணிக்கும் தற்போது, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேவையும் வேலைவாய்ப்பும் அதிகம். நர்சிங் பணியைப் பொறுத்தவரை பிளஸ் டூ முடித்தபிறகு ஜெனரல் நர்சிங் அண்ட் மிட்வைப்ரி என்ற மூன்று ஆண்டு டிப்ளமோ படிப்பையும், பி.எஸ். சி. நான்காண்டு பட்டப் படிப்பையும் படிக்கலாம். நர்சிங் படிப்பைப் பொறுத்தவரை டிப்ளமோ படித்து முடித்த பிறகு, மருத்துவமனையில் சில காலம் பணிபுரிந்த அனுபவம் பெற்றபிறகு போஸ்ட் சர்ட்டிபிகேட் பி.எஸ்.சி., நர்சிங் படிப்பு படிக்க முடியும். நர்சிங் படிப்பு முடித்தவுடன் மாநில நர்சிங் கவுன்சிலில் பதிவு செய்ய வேண்டும். நர்சிங் படித்த மாணவிகள் அரசுப பணிகளுடன் தனியார் மருத்துவமனைகள், ஆய்வுக்கூடங்களிலும் வேலைக்குச செல்ல முடியும். நர்சிங் படித்த மாணவர்கள் தேர்வின் மூலம் அரசு மருததுவமனைகள், சுகாதார நிலையங்களில் அரசுச் செவிலியராகப் பணி புரியலாம். நர்சிங் படிதத மாணவாகள் தேர்வின் மூலம் அரசு மருத்துவமனைகள், சுகாதார நிலையங்களில் அரசு செவிலியராகப் பணி புரியலாம்.

## சித்த மருத்துவம்

மிகப் பழமையான பாரம்பரியமான வைத்திய முறை இது. இது முற்றிலும் இயற்கை வைத்திய முறை என்பதோடு மட்டுமல்லாமல், மனத்திற்கும், உடலுக்கும் நலம்பயக்கும் மருத்துவ முறை என்பதால், மக்களிடையே தற்போது இந்த மருத்துவத்திற்குப் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. சித்த மருத்துவத்தில் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்கள், அரசு மருத்துவமனைகளில் மருத்துவராகப் பணிபுரியலாம். தனியாகச் சித்த மருத்துவமனை தொடங்கலாம். இதுதவிர சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கூடங்களில் பணிபுரியலாம் மற்றும் சித்த மருந்துத் தயாரிப்பிலும் ஈடுபடலாம்.

## மருந்தாளுநகை

ஒரு மருந்தின் தன்மை, அதில் சேர்க்கப்பட்டிருக்கும் வேதிப்பொருள்கள், அதன் தரம், அந்த மருந்தின் பண்புகள், அதன் பக்கவிளைவுகள் இப்படி மருந்துகள் குறித்ததே பி.பார்ம் என்கிற பார்மஸி படிப்பு. மருத்துவமனை, ஆராய்ச்சிக் கூடங்கள், மருந்து உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பார்மஸிஸ்ட் என்கிற மருந்தாளுநருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். தமிழ்நாட்டில் சொந்தமாக மெடிக்கல் ஷாப் வைக்க விரும்புவோர் கண்டிப்பாக, பார்மஸி படித்திருக்க வேண்டும். இதுதவிர தனியார் மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகளில் மருந்தாளுநராகப் பணியாற்ற முடியும். மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களில் பல்வேறு பணிகளில் பணியாற்றலாம். அரசுத் துறையைப் பொறுத்தவரை மருந்து ஆய்வாளர் பணிக்குப் பார்மஸி பட்டப்படிப்பு படித்தவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் மெடிக்கல் ஷாப் ஆரம்பிப்பது என்றாலும், டிரக் இன்ஸ்பெக்டரின் அனுமதியின்றி ஆரம்பிக்க முடியாது. மெடிக்கல் ரெப்ரசன்டேட்டிவ் பணிகளுக்குச் சாதாரணமாக ஏதேனும் ஓர் பட்டப்படிப்பு படித்திருந்தால் போதும். ஆனால், இதுவே ஒரு பார்மஸி படித்த மாணவர், பார்மா நிறுவனங்களுக்குப் பணிக்குச் செல்லும்போது அவர்களுக்குக் கூடுதல் ஊதியமும், விரைவிலேயே நல்ல பதவியும் கிடைக்கின்றது.

## ஹோமியோபதி

மிக எளிய முறையிலான சிகிச்சை முறையும் பக்கவிளைவுகள் இல்லாத மருந்து வகைகள் என்பதாலும், ஹோமியோபதி மருத்துவம் மக்களிடம் முக்கியத்துவம் பெற்று வருகிறது. ஹோமியோபதி மருத்துவப் படிப்பான பி. எச். எம். எஸ். ஐந்தரை ஆண்டு படிப்பு (ஓர் ஆண்டு இன்டர்ன்ஷிப்) உள்ளது. ஹோமியோபதி மருத்துவத்தில் பட்டப்படிப்பு முடிக்கும் மாணவர்கள், மருத்துவமனை, ஆராய்ச்சிக் கூடங்கள், மருத்துவக் கல்லூரிகள், மருத்துவப் பயிற்சி மையங்களில் பணிபுரிய முடியும். இதுதவிர சொந்தமாக ஹோமியோபதி மருத்துவராகப் பணியாற்ற முடியும்.

## ஆயுர்வேதம்


ஆயுர்வேதம் என்பது இந்தியாவின் பாரம்பரிய மருத்துவ முறையாகும். ஆயுர்வேதிக் மெடிசின் அண்ட் சர்ஜரி (பி.ஏ.எம்.எஸ்.) என்னும் ஐந்து ஆண்டுகால ஆயுர்வேத மருத்துவப் பட்டப்படிப்பில் மாணவர்கள் சேரலாம். பி.எஸ்.எம்.எஸ். என்ற ஐந்தாண்டு இளநிலைப் பட்ட ஆயுர்வேத மருத்துவப் படிப்பிலும் சேரலாம். டிப்ளமோ இன் ஆயுர்வேதிக் பார்மஸி என்ற ஆயுர்வேத டிப்ளமோ படிப்பிற்கான காலம் இரண்டு ஆண்டுகள்.

## பிசியோதெரபி

துணை மருத்துவப் படிப்புகளில் மிக முக்கியமானது கை, கால் எலும்பு முறிவு, சுளுக்குப் போன்றவற்றிற்கும், நீண்ட நாட்களாக இருக்கும் உடல் உபாதைகளுக்கும், உடற்பயிற்சி மற்றும் தொடர் சிகிச்சை மூலம் உடம்பின் பாகங்களைச் சரிசெய்வதில் பிசியோதெரபி சிகிச்சை சிறந்த மருத்துவ முறையாக இருக்கிறது. பிபிடி எனப்படும் இந்தப் பட்டப்படிப்பு மொத்தம் நான்கரை ஆண்டுகாலப் படிப்பு ஆகும். பிசியோதெரபியில் பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்கள் அரசு மருத்துவமனைகள் தனியார் மருத்துவமனையில் பணிபுரிய முடியும்.

## மருத்துவம் சார்ந்த இதர படிப்புகள்

- ஆக்குபேஷனல் தெரபி
- ஆப்ட்டோமெட்ரி
- ஆடியாலஜி
- ரேடியோகிராபி
- மெடிக்கல் லேப் டெக்னாலஜி
- ஸ்பீச் தெரபி





9789356061194


9789353947965


9789356061200


9789353947972


9789356061217

'உயர்கல்வி நுழைவுத் தேர்வு நூல் வரிசை'



# வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த படிப்புகள்

## (வேளாண், கால்நடை மற்றும் மீன் வளப் படிப்புகள்)

நாட்டில் எவ்வளவுதான் தொழில் வளர்ச்சி அடைந்தாலும்கூட, வேளாண் தொழிலின் முக்கியத்துவம் குறைந்துவிடாது. இந்தத் துறையில் தகுதி வாய்ந்த பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 1971ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இங்குள்ள வேளாண் படிப்புகளில் பிளஸ் டூ மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். அகில இந்திய ஒதுக்கீட்டின்கீழ் உள்ள இடங்களுக்கு அகில இந்திய அளவில் நுழைவுத்தேர்வு நடத்தப்படுகிறது.

வேளாண் படிப்புகளில் சேர உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்களுடன் இயற்பியல், வேதியியல் பாடப்பிரிவுகளையும் எடுத்துப் படித்திருக்க வேண்டும். பி.டெக். படிப்பில் சேர விரும்புவோர் கணிதத்தையும் ஒரு பாடமாக எடுத்துப் படித்திருக்க வேண்டும்.

வேளாண்துறைப் படிப்புகளைப் படித்தவர்களுக்கு அரசுத் துறைகளிலும் வங்கிகளிலும் தனியார் வேளாண் நிறுவனங்களிலும் உர நிறுவனங்களிலும், வேளாண் கருவி தயாரிப்பு நிறுவனங்களிலும் வேலை கிடைக்கும். வனவியல் படித்த மாணவர்கள் இந்தியன் பாரஸ்ட் சர்வீஸ் தேர்வை எழுதலாம். வேளாண் துறை சார்ந்த பட்டப்படிப்புகளைப் படித்த மாணவர்கள் அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளிலும் கலந்துகொள்ளலாம்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள படிப்புகள்:

பி.எஸ்.சி (ஆனர்ஸ்) வேளாண்மை **(Agriculture)**

பி.எஸ்.சி (ஆனர்ஸ்) தோட்டக்கலை **(Horticulture)**

பி.எஸ்.சி (ஆனர்ஸ்) வனவியல் **(Forestry)**

பி.எஸ்.சி (ஆனர்ஸ்) உணவு, ஊட்டச்சத்து மற்றும் உணவு முறையியல் **(Food, Nutrition and Dietetics)**

பி.எஸ்.சி (ஆனர்ஸ்) பட்டு வளர்ப்பு **(Sericulture)**

பி.டெக் வேளாண் பொறியியல் **(Agricultural Engineering)**

பி.டெக் உணவுத் தொழில்நுட்பம் **(Food technology)**

பி.டெக். உயிரித் தொழில்நுட்பம் **(Biotechnology)**

பி.டெக் எரிசக்தி மற்றும் சுற்றுப்புறச்சூழல் பொறியியல் **(Energy and Environmental Engineering)**

பி.எஸ் வேளாண் வர்த்தக மேலாண்மை **(Agri business management)**

## கால்நடை மருத்துவப் படிப்புகள்




தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் பி.வி.எஸ்சி. அண்ட் ஏ.ஹெச். படிப்புகளில் சேரலாம். ஐந்து ஆண்டுப் படிப்பு இது. அத்துடன் 6 மாதப் பயிற்சியும் உண்டு. பிளஸ் டூ வகுப்பில் இயற்பியல், வேதியியல் பாடங்களுடன் உயிரியல் அல்லது தாவரவியல், விலங்கியல் பாடங்களை எடுத்துப் படித்தவர்கள் கால்நடை மருத்துவப் படிப்பில் சேரலாம். உயிரியல் பாடத்துடன் கோழி வளர்ப்பு அல்லது பால்வளம் ஆகிய தொழில் பாடப்பிரிவுகளை (வொகெஷனல்) எடுத்துப் படித்தவர்களும் இப்படிப்பில் சேர விண்ணப்பிக்கலாம். இப்படிப்பில் அகில இந்திய அளவில் உள்ள இடங்களில் சேருவதற்கு நுழைவுத்தேர்வை எழுத வேண்டும்.

இப்படிப்பை முடித்தவர்கள், கால்நடை மருத்துவமனைகளில் மருத்துவராகப் பணி புரியலாம். கால்நடைப் பண்ணைகள், கோழிப் பண்ணைகளிலும் கால்நடைத் தீவனங்கள் தயாரிப்பு நிலையங்களிலும் பால் உற்பத்தி நிலையங்களிலும் கால்நடை மருத்துவர்களுக்கு வேலைவாய்ப்பு உள்ளது. அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் அரசுப் பணிகளுக்கும் செல்லலாம்.

## கால்நடை பல்கலைக்கழகத்தின் 9 கல்லூரிகள்

1. Madras Veterinary College, Chennai
2. Veterinary College and Research Institute, Namakkal
3. Veterinary College and Research Institute, Thirunelveli
4. Veterinary College and Research Institute, Orathanaadu
5. Veterinary College and Research Institute, Salem
6. Veterinary College and Research Institute, Theni
7 .College of Food and Dairy Technology, Koduvalli
8. College of Poultry Production and Management, Hosur
9. Post Graduate Research Institute in Animal Sciences, Kattupakkam

## இப்பல்கலைக்கழகத்தில் உள்ள படிப்புகள்:

பி.டெக்.ஃபுட் டெக்னாலஜி (Food Technology)

பி.டெக்.பால் வளத் தொழில்நுட்பம் (Dairy Technology)

கோழியினத் தொழில்நுட்பம் (Poultry Production Technology)

இந்த நான்கு ஆண்டு படிப்புகளில் பிளஸ் டூ வகுப்பில் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடங்களைப் படித்தவர்கள் இப்படிப்பில் சேரலாம். தமிழ்நாட்டில் தனியார் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் ஏதும் இல்லை.

## மீன் வளப் படிப்புகள்



மீன்வளப் படிப்புகளுக்காக 2012ஆம் ஆண்டில் நாகப்பட்டினத்தில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. பி.எஃப்.எஸ்சி. படிப்பில்சேர விரும்பும் மாணவர்கள் பிளஸ் டூ வகுப்பில் உயிரியல் (அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல்) , இயற்பியல், வேதியியல் ஆகியவற்றை முதன்மைப் பாடங்களாக எடுத்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மீன்வளம் அல்லது அக்ரிகல்சுரல் பிராக்டிசஸ் பாடத்தினை முக்கியப் பாடமாக எடுத்துப் படித்திருக்கும் தொழிற்பயிற்சி (வொகேஷனல்) பிரிவு மாணவர்களும் பி.எஃப்.எஸ்சி. படிப்பில் சேர விண்ணப்பிக்கலாம்.

பி.டெக். படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் இயற்பியல், வேதியியலுடன் கணிதத்தையும் ஒரு பாடமாக எடுத்துப் படித்திருக்க வேண்டும். இந்தப் படிப்புகளில் சேர விண்ணப்பிக்கும் மாணவர்கள், பிளஸ் டூ மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## மீன் வளத்துறை இளநிலைப் பட்டப்படிப்புகள்:

பி.எப்.எஸ்சி (Bachelor of Fisheries Science)

பி.டெக் பிஷரிஸ் என்ஜினியரிங் (Fisheries Engineering)

பி.டெக் பயோ டெக்னாலஜி (Biotechnology)

பி.டெக் புட் டெக்னாலஜி (B.Tech. – Food Technology)

பி.டெக். எனர்ஜி அண்ட் என்விரான்மெண்டல் என்ஜினியரிங் (Energy and Environmental Engineering)

பி.பி.ஏ பிஷரிஸ் பிசினஸ் மேனேஜ்மெண்ட் (Fisheries Business management)

பி.வொக். ஆக்வாக்கல்ச்சர் .. B.Voc. (Aquaculture)

பி.வொக். இண்டஸ்ட்ரியல் ஃபிஷ் புராசசிங் டெக்னாலஜி (B.Voc – Industrial Fish Processing Technology)

பி.வொக். இண்டஸ்ட்ரியல் ஃபிஷ்ஷிங் டெக்னாலஜி (B.Voc. – Industrial Fishing Technology)

பி.வொக். ஆக்வாட்டிக் அனிமல் ஹெல்த் மேனேஜ்மெண்ட் (B.Voc – Aquatic Animal Health Management)

மீன் வளத்துறை தொடர்பான படிப்புகளைப் படித்தவர்களுக்கு மத்திய, மாநில அரசுகளின் மீன் வளத்துறைகளில் வேலைக்குச் சேரலாம். மீன் ஏற்றுமதி நிறுவனங்களிலும் மீன் பதனிடும் நிறுவனங்களிலும் இறால் பண்ணைகளிலும் மீன் உணவுத் தயாரிப்பு நிறுவனங்களிலும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

# பாலிடெக்னிக் மற்றும் ஐ.டி.ஐ. கல்லூரிகள்

கடந்த சில பத்தாண்டுகளாகவே தொழில்நுட்பத் துறை, உற்பத்தித் துறை, மென்பொருள் துறை என அனைத்தும் மிக வேகமாக வளர்ந்து வருகின்றன. அதற்கேற்ப இத்துறைகளில் பல்லாயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் கொட்டிக்கிடக்கின்றன. தமிழ்நாட்டில் மொத்தம் 54 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளும், 34 அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் 403 தனியார் பாலிடெக்னிக் கல்லூரிகளும் உள்ளன. இப்பாலிடெக்னிக் கல்லூரிகளில் 66 வகையான பட்டயப் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் துறையில் சாதிக்க நினைக்கும் மாணவர்களுக்குத் தமிழ் நாட்டில் இருக்கும் இப்பாலிடெக்னிக் கல்லூரிகள் மிகச்சிறந்த கல்வியை அளித்து, தொழிற்துறைக்குத் தேவையான திறன்களையும் மாணவர்களுக்குப் பயிற்றுவித்து அனுப்புகின்றன. அதிலும் குறிப்பாக 2023 ஆம் ஆண்டு முதல் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்குப் புதிய மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது. இப்புதியபாடத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்:



- செய்முறைத்திறனுக்கு அதிக முக்கியத்துவம்
- எளிமைப்படுத்தப்பட்ட பாடங்கள், குறிப்பாக முதலாம் ஆண்டு பாடங்கள்
- எழுத்துத்திறனை விட செயல்திறனை சோதிக்கும் புதிய தேர்வு முறை படிக்கும்போதே நிறுவனங்களில் சென்று பயிற்சிபெறும் நெகிழ்வுத் தன்மை கொண்ட பாடத்திட்டம்
- வெவ்வேறு வகையான மென்திறன் வளர்க்கும் பயிற்சிகள்
- சிறந்த தொழில் ஆளுமைகளை அழைத்து கல்லூரிக்குள் மாணவர்களிடையே உரை நிகழ்த்தும் திட்டம்
- கிரெடிட் முறை
- பல்வேறு வகையான எலக்டிவ் படிப்புகள் தேர்ந்தெடுக்கும் வசதி, தொழில் முனைவோராக மாறப் பயிற்சி
- மாணவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க பெரிய தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**இதுமட்டுமல்லாமல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு அரசு எண்ணற்ற சலுகைகளை அளிக்கிறது. குறிப்பாகச் சிலவற்றைப் பார்ப்போம்.**

- அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் பயில்வோர்க்குக் கல்விக்கட்டண விலக்கு
- ஒவ்வோர் ஆண்டும் 7,500 அரசு பாலிடெக்னிக் மாணவர்களுக்கு இலவசமாக 25 நாள்களுக்குத் தொழிலக உள் பயிற்சி அளித்தல்
- இப்பயிற்சியினை வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்களுக்கு அத்தொழில் நிறுவனத்திலேயே வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்
- ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டம்
- முதலாம் ஆண்டு பாடங்களுக்கு விலையில்லாப் பாடப்புத்தகங்கள்
  பயணக் கட்டணச் சலுகை
- குறிப்பிட்ட சில அரசுக் கல்லூரிகளில் தொழில் முனைவு மேம்பாட்டு மையங்கள் நிறுவப்பட்டுப் பல்வேறு கல்லூரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம்

வணிகப் பயிற்சி பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்கள், தமிழகத்தில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்கள் வழங்கும் அனைத்து இளநிலை வணிகப் பாடப்பிரிவுகளில் 2022-2023ஆம் கல்வியாண்டு முதல் நேரடியாக இரண்டாம் ஆண்டு நேரடிச் சேர்க்கைக்கான வசதி

**மேலும், பல்வேறு வகையான புதிய பாடப்பிரிவுகளும், உட்கட்டமைப்பு வசதிகள், திறன் மேம்பாட்டுத் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

2022-2023ஆம் கல்வியாண்டு முதல் முக்கியமான அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் தமிழ் வழியில் பட்டயப்படிப்புகள் அறிமுகம்

மகளிருக்கென்று ஆறு புதிய பாடப்பிரிவுகள் அறிமுகம்

1. பல்வேறு அரசுத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் கூடுதல் விடுதி கட்ட நிதி ஒதுக்கீடு
2. ஐந்து வகையான புதிய தொழில் நுட்பப் படிப்புகள் இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. அவை: 1) ஆடை வடிவமைப்புப் பட்டயப் படிப்பு 2) வேளாண்மைப் பொறியியல் பட்டயப் படிப்பு 3) இயந்திர மின்னணுவியல் பட்டயப் படிப்பு 4) தளவாடத் தொழில்நுட்பப் பட்டயப்படிப்பு 5) தானியங்கி பொறியியல் (சான்ட்விச்) பட்டயப் படிப்பு
3. மின் உபகரணங்களை நிறுவல், தொழிலகக் கட்டுப்பாடுகள், தொழிலகத் தன்னியக்கமாக்கல், கட்டட தன்னியக்கமாக்கல் போன்ற உலகத் திறன்களுக்கு ஏற்பத் திறன்களை மாணாக்கர்களுக்கு வழங்கி, மேம்படுத்துவதற்கு ஏதுவாக சென்னை, கோயம்புத்தூர், தருமபுரி, மயிலாடுதுறை, திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள 6 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில், ஸ்னைடர் எலக்ட்ரிக் நிறுவனத்துடன் இணைந்து ரூ.10.00 கோடி செலவில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு க் கழகத்தின் நிதியுதவியுடன் உலகத் திறன் அகாடெமி மற்றும் நவீன தொழில்நுட்ப உற்பத்தி மையம் அமைக்கப்பட்டு வருகிறது. தொழில்திறன் அடிப்படையிலான புதுப்பிக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் சுற்றுச்சூழல் ஆய்வகம், பொருட்களின் இணைய ஆய்வகம், கணினி ஆய்வகம் மற்றும் பிற ஆய்வகங்களை நவீனப்படுத்துவதற்காகப் பல்வேறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்குத் தமிழக அரசு ரூ.50.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.
4. மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களின் தனித்திறமைகள், கற்றல் உத்திகள், படைப்பாற்றல், ஆக்கப்பூர்வமான சிந்தனைகள் ஆகியவற்றைச் செயல்முறை அறிவுத்திறனுடன் செயல்படுத்த காரைக்குடி, ஸ்ரீரங்கம், திருநெல்வேலி, சேலம் ஆகிய நான்கு அரசுப்பொறியியல் கல்லூரிகளிலும் மற்றும் மதுரையில் உள்ள தமிழ்நாடு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியிலும் தொழிற்சாலைகளுடன் இணைந்து செய்கலைஞர் ஆய்வகம் (Fab Makerspace Lab) நிறுவப்படவுள்ளது.
5. தரமிக்க தொழில்நுட்பக் கல்வியை மாணாக்கர்களுக்கு வழங்குவதற்கு, நன்கு மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய திறன்மிகு வகுப்பறைகள் கூடுதல் தேவைகள் என்பதால், தமிழகத்தில் உள்ள 50 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் ரூ.10.00 கோடி செலவில் திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய திறன்மிகு வகுப்பறைகள் மாணாக்கர்களின் அறிவை மேம்படுத்தவும், புத்தக அறிவை நடைமுறையில் பயன்படுத்தவும் உதவுகிறது. மேலும், மென்பொருள் மற்றும் உருவகப்படுத்துதல் மூலம் இணைய பாதுகாப்பு (Cyber Security) பயிற்சி, கேஸ்கட்டிங் செயல்முறை (Gas Cutting Process),

போர்க்லிப்ஃட்(Forklift) பயிற்சி, ஒடுங்குமுறை உற்பத்தி (Lean Manufacturing), கட்டட பாதுகாப்பு, கியர்பாக்ஸ் (Gear Box), பவர்ஜெனரேடர் (Power Generator) எனப் பல்வேறு தொழில்நுட்பப் பயிற்சிகள் இந்தத் திறன்மிகு வகுப்பறைகள் மூலம் வழங்கப்படுகிறது.

மேற்கண்ட திட்டங்களைப் பார்க்கும்போது தமிழ்நாட்டின் தொழில்நுட்பக் கல்வித்துறை மிகப்பெரிய பாய்ச்சலைக் கொண்டுவருகிறது என்று புரிந்து கொள்ளலாம். எனவே மாணவர்கள் தொழில்நுட்பப் படிப்புகளைத் தேர்ந்தெடுத்தால் அவர்கள் தொழில்துறையில் மிக எளிதாக வேலைவாய்ப்பைப் பெற்று வாழ்க்கையில் முன்னேற பிரகாசமான வாய்ப்புகள் இருக்கிறது.

## அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்கள் (Govt ITIs )

- மாநிலத்தில் வளர்ந்து வரும் தொழிற்சாலைகளுக்குத் தொடர்ந்து திறன்மிக்க தொழிலாளர்களை வழங்கிடும் நோக்கில் 102 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் செயல்படுகின்றன. இவற்றில் எலெக்ட்ரிசியன், பிட்டர், மெக்கானிக் மோட்டார் வெஹிகிள், டர்னர், மெஷினிஸ்ட், வெல்டர் போன்ற 55 பொறியியல் தொழிற்பிரிவுகளிலும் கம்ப்யூட்டர் ஆபரேட்டர் அண்ட் ப்ரோக்ராம்மிங் அசிஸ்டன்ட், சூயிங் டெக்னாலஜி, உணவு தயாரித்தல், பேஷன் டிசைனிங், டெஸ்க்டாப் பப்ளிசிங் ஆபரேட்டர் போன்ற 24 பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- இவற்றுடன் அதிக வேலைவாய்ப்புள்ள நவீன உயர்ரக தொழிற்பிரிவுகளான டிரோன் பைலட், ஆர்கிடேச்சுரல் அசிஸ்டன்ட், ஸ்மார்ட் போன் டெச்னிசியன், ஃபயர் டெக்னாலஜி அண்ட் இண்டஸ்ட்ரியல் சேப்டி மேனேஜ்மென்ட் ஆகியவற்றிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- நீண்ட காலத் தொழிற்பயிற்சியில் 70 சதவீதம் செய்முறை பயிற்சியும், 30 சதவீதம் கருத்தியல் மற்றும் தொடர்பான பணிமனை கணக்கு, அறிவியல், பொறியியல் வரைபடம், வேலைவாய்ப்பிற்கான திறன்கள் ஆகியவை கற்றுத் தரப்படுகிறது.
- வழங்கப்படுகின்ற பயிற்சியானது தேசிய திறன் தகுதி கட்டமைப்பில் (NSQF ) 4 மற்றும் 5 ஆம் நிலைகளில் உள்ளது.
- ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தின்கீழ் செயல்படும் தலைமை இயக்ககம் (பயிற்சி), புது டில்லி, அவர்களின், வழிகாட்டுதலின்படி திறன் பயிற்சிகள், தேர்வுகள், சான்றிதழ்கள் ஆகியவை வழங்கப்படுகின்றன.
- 8ஆவது வகுப்பு தேர்ச்சி மற்றும் 10ஆவது வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இப்பயிற்சிகளில் இடஒதுக்கீடு மற்றும் மதிப்பெண்கள் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் இணையவழியில் மாநில அளவிலான கலந்தாய்வின் மூலமாகச் சேர்க்கப்படுகிறார்கள். வெற்றிகரமாக பயிற்சியை முடிப்பவர்களுக்குத் தேசிய சான்றிதழ் வழங்கப்படுகிறது.

## தொழில் 4.0 தரத்தில் அரசுத் தொழிற் பயிற்சி நிலையங்களைத் தொழிநுட்ப மையங்களாகத் தரம் உயர்த்துதல்

- தமிழ்நாடு அரசு டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து 71 அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்த மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுத் தற்போது பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. வரும் கல்வி ஆண்டில் கீழ்க்காணும் 5 நீண்ட காலத் தொழிற் பிரிவுகளும் 23 குறுகிய காலத் தொழிற்பிரிவுகளும் இத்திட்டத்தின் கீழ்த் துவங்கப்பட உள்ளன.

## நீண்ட காலப் பயிற்சிகள்:

1. இண்டஸ்ட்ரியல் ரோபோடிக்ஸ் அண்ட் டிஜிட்டல் மேனுபேக்சுரிங் டெக்னிசியன்
2. மெக்கானிக் எலக்ட்ரிக் வெஹிக்கிள்
3. CNC மெஷினிங் டெக்னிசியன்
4. பேசிக் டிசைனர் அண்ட் விர்ச்சுவல் வெரிஃபையர்
5. மேனுபேக்சுரிங் பிராசஸ் கண்ட்ரோல் அண்ட் ஆட்டோமேஷன்

இத்திட்டத்தின் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும் 10,040 மாணவர்கள் பயனடைவர்.



## குறுகிய காலப் பயிற்சிகள்

1. இன்டர்நெட் ஆப் திங்ஸ்
2. அட்வான்ஸ்டு பிளம்பிங்
3. இண்டஸ்ட்ரியல் ரோபோடிக்ஸ்
4. இண்டஸ்ட்ரியல் ரோபோடிக்ஸ்
5. ப்ரொடக்ட் வெரிஃபிகேஷன் அண்ட் அனாலிசிஸ்
6. இன்னோவேஷன் அண்ட் டிசைன் திங்கிங்
7. ஆட்டோ எலக்ட்ரிகல் மெய்ன்டனன்ஸ்
8. அட்வான்ஸ்டு மெஷினிங்
9. அட்வான்ஸ்டு வெல்டிங்
10. அட்வான்ஸ்டு பெயின்டிங் டெக்னாலஜி - உள்ளிட்ட 23 குறுகிய காலப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.



**இக்குறுகிய காலப் பயிற்சிகளின் மூலம் பட்டம் / பட்டய / சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலை தொழிலாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது. தோராயமாக 19000 பேர் பயனடைவர்.**

## பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளை ஊக்கப்படுத்துதல்

பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் திறன்பயிற்சி பெறுவதை ஊக்கப்படுத்திடும் வகையில் பிரேத்யேகமாக 2 பட்டியலின அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்கள் சிதம்பரம் மற்றும் வடகரை ஆகிய இடங்களிலும், 6 பழங்குடியின அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்கள் அவர்கள் அதிகம் வசிக்கும் இடங்களான சங்கராபுரம், ஆனைக்கட்டி, கருமந்துறை, ஜமுனாமரத்தூர், கொல்லிமலை, கூடலூர் ஆகிய இடங்களிலும் செயல்படுகின்றன. மாற்றுத் திறனாளிகளுக்கென அனைத்துத் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 5 சதவீதம் இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

திறன்பயிற்சி பெறுவதற்கு வயது வரம்பு ஆண்களுக்கு 14 முதல் 40 வரையிலும் பெண்களுக்கு 14 முதல் அதிகபட்ச வயது வரம்பு இன்றிச் சேரலாம் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## மகளிரைத் திறன் பயிற்சிக்கு ஊக்கப் படுத்துதல்

மகளிர் திறன் பயிற்சிக்கு சேருவதை ஊக்கப்படுத்திடவும் பாலின சமத்துவத்தை அடைந்திடவும் பிரேத்யேகமாக 10 அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையங்களும், 3 தொழிற்பயிற்சி நிலையங்களில் மகளிர் பிரிவுகளும் செயல்படுகின்றன. இவைதவிர அனைத்துத் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 30 சதவீதம் இட ஒதுக்கீடு மகளிர்க்கென வழங்கப்படுகிறது.



## திறன் மேம்பாட்டிற்கு மாணவர்களை ஊக்கப்படுத்துதல்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் கீழ்க்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

1. கட்டணமில்லாப் பயிற்சி
2. வருடத்திற்கு இரண்டு இணைச் சீருடைகள் மற்றும் ஓர் இணைப் பாதுகாப்புக் காலணிகள்
3. பேருந்துப் பயணச் சலுகை
4. மிதி வண்டி
5. மாதாந்திர உதவித் தொகை (ரூ. 750/- )
6. பாடப் புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள்
7. பயிற்சிக்குத் தேவையான மூலப் பொருட்கள்



## தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களை ஊக்குவித்தல்

மாநிலத்தில் இயங்கி வரும் 326 தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும் 50 சதவீதம் அரசு ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கை செய்யப்படும் மாணவர்களின் பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்று அதனைத் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்குத் திரும்ப வழங்கி வருகிறது . இக்கட்டணம் பொறியியல் தொழிற்பிரிவுகளில் சேரும் மாணவர்களுக்கு ரூ. 16800/- எனவும், பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் சேரும் மாணவர்களுக்கு ரூ. 13000/- எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## வேலை வாய்ப்பை உறுதிசெய்தல்

- ☑ பயிற்சியாளர்களின் வேலைவாய்ப்பை உறுதிசெய்யும் பொருட்டு, அனைத்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பணியமர்த்தும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொழில் நிறுவனங்கள் மற்றும் மாணவர்களிடையேயான உறவை வளர்த்து நூறு சதவீதம் வேலைவாய்ப்பினை எட்டும் விதமாகப் பணிபுரிகின்றனர்.
- ☑ பயிற்சி முடியும் முன்னரே முன்னணி தொழிற் நிறுவனங்கள் மூலம் வளாக நேர்காணல்களை ஏற்பாடு செய்து மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்படுகிறது. அகில இந்திய தொழிற்தேர்விற்குப் பிறகு மாணவர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள். பணியமர்த்தப்பட்ட மாணவர்கள் பணியில் இணைந்த பிறகும் ஒரு வருடம் வரை பணியமர்த்தும் அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு அவர்களுக்குப் பணிகளில் ஏற்படும் குறைகளைக் களைந்து தொடர்ந்து பணிபுரிய ஆவண செய்யப்படுகிறது.
- ☑ மேலும் தொழிற்பழகுநர் பயிற்சி சட்டம், 1961இன் படி, மாணவர்கள் ஒரு வருட தொழிற் பழகுநர் பயிற்சிக்கும் முன்னணி நிறுவனங்களால் தேர்வு செய்யப்படுகின்றனர்.



இந்த ஆண்டு ஆயிரம் பழங்குடியின இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்குத் தங்குமிட வசதிகள் கொண்ட நவீன தொழில் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து உரிய வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவதற்கெனத் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

பழங்குடியின இளைஞர்கள் 1,000 பேருக்குத் திறன் பயிற்சி.

தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட் 2024 – 25

- ☑ எலெக்ட்ரிசியன், வயர்மென், மெக்கானிக் மோட்டார் வெகிக்கிள், மெக்கானிக் டீசல் போன்ற தொழிற்பிரிவுகளில் பயிலும் மாணவர்கள் பயிற்சிக்குப் பின்னர் அரசு / பொதுத்துறை நிறுவனங்களான தமிழ்நாடு மின் பகிர்மானம் மற்றும் தொடரமைப்புக் கழகம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், இரயில்வே, டான்சி போன்ற நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறுகின்றனர்.
- ☑ டெச்னிசியன்களாக நிறுவனங்களில் பணியமர்த்தப்படும் இளைஞர்கள் வேலையில் இருந்து கொண்டே தங்களது கல்வித் தகுதி மற்றும் திறன் தகுதிகளை உயர்த்திக் கொள்ள ஏதுவாக ஐடிஐ படிப்புகளை 10ஆவது மற்றும் 12ஆம் வகுப்புக்கு இணையான கல்வித் தகுதியாகத் தமிழக அரசு அரசாணை மூலம் அறிவித்துள்ளது. இந்த வாய்ப்பினை இளைஞர்கள் பயன்படுத்தித் தங்கள் தொழில் நிறுவனங்களில் பதவி உயர்வுகளைப் பெற்று வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளலாம்.
- ☑ இவ்வாறு தங்கள் நிலைகளை உயர்த்திக்கொண்டு நிறுவனங்களில் உயர்பதவியை அடைந்தவர்கள் பலர் உள்ளனர். மேலும் இவ்வாறு திறன் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டு அனுபவத்துடன் தொழில் முனைவோராக வெற்றிகரமாகச் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளை நடத்திக் கொண்டும் பலர் உள்ளனர்.
- ☑ இவ்வாறாக மாநிலத்தில் உள்ள இளைஞர்கள் நீண்டகால மற்றும் குறுகிய காலப் பயிற்சிகளைப் பெற்று அரசு / பொதுத்துறை நிறுவனங்கள், முன்னணி நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலைவாய்ப்பினைப் பெற்று வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# போட்டித் தேர்வுகள்

# பெரிய கலெக்டராகலாம் வாங்க!

நீ என்ன பெரிய கலெக்டரா? என்ற கேள்வியை நாம் பல இடங்களில் எதிர்கொண்டிருக்கக்கூடும்.

அதென்ன பெரிய கலெக்டர்?

கலெக்டராவதற்கு அப்படி என்னதான் படிக்க வேண்டும்?

இந்தத் தேர்வுகளை ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) ஆண்டுதோறும் நடத்துகிறது.




தற்போது ஒன்றியப் பணியாளர் தேர்வாணையம், இரயில்வே மற்றும் வங்கிப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டு இளைஞர்கள் அதிகம் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்கு சென்னை, கோவை, மதுரை மண்டலங்களில் உண்டு உறைவிட வசதியோடு கூடிய தரமான ஆறுமாத காலப் பயிற்சி வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு: www.tnskill.tn.gov.in

1,000 மாணவர்களுக்கு ஒன்றியப் பணியாளர் தேர்வாணையம் (SSC), ரயில்வே, வங்கித் தேர்வுகளுக்கான ஆறு மாத உண்டு உறைவிடப் பயிற்சி.
சென்னை, கோயம்புத்தூர், மதுரை.

தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட் 2024 – 25

இந்தியக் குடிமைப் பணித் தேர்வு எழுதுவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதாவது ஓர் இளநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். தொலைதூரக் கல்வி மூலம் பட்டம் பெற்றவர்களும் இந்தத் தேர்வை எழுதலாம். முதற்கட்டத் தேர்வில் பொது அறிவு வினாக்கள் பட்டப்படிப்பு அளவிலும், முதன்மைத் தேர்வில் விருப்பப் பாடங்களின் வினாக்கள் முதுநிலைப் பட்டப்படிப்பு அளவிலும் அமைந்திருக்கும் என்று தேர்வாணையம் வரையறுத்திருக்கிறது.

முதற்கட்டத் தேர்வு (Preliminary Exam) என்பது கொள்குறிவகை வினாத் தேர்வாகும். முதன்மைத் தேர்வு (Main Exam) 9 தாள்கள் கொண்ட எழுத்துத் தேர்வு மற்றும் ஆளுமைத் தேர்வு ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்திய வனப் பணிக்கான முதன்மைத் தேர்வு, ஆறு தாள்கள் கொண்டது. அது தனியாக நடத்தப்படுகிறது. இந்தியக் குடிமைப் பணிக்கான முதற்கட்டத் தேர்வில் தேறியவர்கள் மட்டுமே இந்திய வனப்பணிக்கான முதன்மைத் தேர்வை எழுத இயலும்.

குடிமைப் பணித் தேர்வை 21 வயது முதல் 32 வயது வரை எழுதலாம். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் 37 வயது வரை எழுதலாம். இதர பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதிகபட்ச வயதுவரம்பு 35 ஆகும். மாற்றுத்திறனாளிகளுக்கு வயதுவரம்பில் பத்து வருடம் சலுகை உண்டு. முன்னாள் ராணுவத்தினருக்கு அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களோ அந்த வகுப்புக்கான வயது உச்சவரம்பிலிருந்து ஐந்து ஆண்டுகள் கூடுதலாக வழங்கப்படும்.

பொதுப்பிரிவினர் ஆறு முறையும், இதர பிற்படுத்தப்பட்டோர் ஒன்பது முறையும் தேர்வெழுதலாம். பழங்குடியினர் மற்றும் பட்டியல் இனத்தவர் 21-37 வயது வரை எத்தனை முறை வேண்டுமானாலும் எழுதலாம். தேர்வுக்கு விண்ணப்பித்தவர் முதற்கட்டத் தேர்வை எழுதினால்தான் தேர்வுக்கான முயற்சி எனக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். விண்ணப்பித்து விட்டு முதற்கட்டத் தேர்வை எழுதா விட்டால் அது வாய்ப்புமுறைக் கணக்கில் வராது.

ஒன்றிய அரசு நடத்தும் இந்திய குடிமைப் பணி தேர்வுகளில் (UPSC-CSE) தமிழக மாணவர்களின் பங்கேற்பையும் வெற்றியையும் அதிகரிக்க அரசு ஒரு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

## இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும்

1. தேர்வு நடத்தி ஆயிரம் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
2. முதல்நிலை தேர்வு (Preliminary exam) வரை 10 மாதங்களுக்கு மாதம் 7,500 ரூபாய் வழங்கப்படும்.
3. முதன்மை தேர்வுக்கு (Mains exam) தேர்ச்சி அடைந்தவர்களுக்கு 25,000 ரூபாய் ரொக்கமாக வழங்கப்படும்.
4. நிதி உதவியுடன் சிறந்த பயிற்சிகளும் வழங்கப்படும்.

# குடிமைப்பணித் தேர்வு குறிப்புதவி நூல் பட்டியல் (தமிழ் வழி)

1. இந்திய அரசமைப்பு
   - பேராசிரியர் சந்திரசேகர்

2. இந்திய தேசிய இயக்கத்தின்வரலாறு
   - மாணிக்கவேலு

3. இந்திய விடுதலைப் போராட்டம்
   - க. வெங்கடேசன்

4. சுதந்திரத்திற்குப் பின் இந்தியா
   - க. வெங்கடேசன்

5. நவீன கால இந்தியா
   - பிபன் சந்திரா

6. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியும் விடுதலைப் போராட்டமும்
   - சங்கர சரவணன்

7. இந்தியப் பொருளாதாரம் முக்கியக் கருத்துக்கள்
   - சங்கர் கணேஷ்

8. இந்தியக் கலை வரலாறு (2 புத்தகங்கள்)
   - கோ. தங்கவேலு

9. அளவுத்திறன்
   - R.S. அகர்வால்

## தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், வெளியிட்டுள்ள நூல்கள்

10 இந்தியாவில் சட்ட முறைமை
- பாலிநாரிமன்
(தமிழில்: கண்ணையன் தட்சிணாமூர்த்தி)

11 11, 12ஆம் வகுப்புக்களுக்குரிய வரலாற்றுப் புத்தகம்

12 6 முதல் 12ஆம் வகுப்புவரை உள்ள புவியியல் மற்றும் சமூக அறிவியல்

13 11, 12ஆம் வகுப்புக்களுக்குரிய சுற்றுச்சூழல் அறிவியல்

14 இந்திய பொருளாதாரம்
- குருசரண் தாஸ்

15 உலக வரலாறு
- பக்தவத்சலு

16 புறநிலை எண் கணிதம்
- R.S. அகர்வால்

17 புவியியல் வரைபடம் (Atlas)


18 India Year Book / மனோரமா / விகடன் / தி இந்து இயர்புக்ஸ்

(நூல்களை ஆசிரியர் பெயர் குறிப்பிட்டு இணையத்தில் தேடவும்)

# SSC மற்றும் RRB தேர்வுகள்

SSC-என்பது ஒன்றிய அரசுப் பணிகளுக்காகத் தேர்வுகளை நடத்தும் தேர்வாணையம். இந்த ஆணையம் ஒன்றிய அரசின் பல்வேறு அமைச்சகங்களுக்கான பல்வேறு B,C,D நிலை ஊழியர்களைத் தேர்வுகளின் மூலம் தேர்வு செய்கிறது. சான்றாக, வருமான வரித்துறை (Income Tax Department) சரக்கு மற்றும் சேவை வரி (GST – Dept.) மத்திய புலனாய்வுத்துறை (CBI), அமலாக்கத்துறை (Enforcement Directorate), லஞ்ச ஒழிப்புத்துறை (Vigilance Office), உளவுத்துறை (Intelligence Bureau) போன்ற பல்வேறு துறைகளின் அமைப்புகள் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் செயல்படுகிறது. இதுபோன்ற பல்வேறு துறைகளில் பணிபுரியும் ஊழியர்களை SSC தேர்வாணையம் போட்டித் தேர்வின் மூலம் தேர்வு செய்து பணியில் அமர்த்துகிறது.

## நடத்தும் தேர்வுகள்




## தொடர்ந்து தேர்வெழுத வேண்டும்

பொதுவாக SSC போன்ற தேர்வுகளுக்கு மாணவர்கள் எந்த வயதில் தயாராக வேண்டும் எனில் SSC தேர்வாணையம் நடத்தும் 10th level மற்றும் +2 தேர்வுகளுக்கு ஒரே விதமாக இருப்பதால் மாணவர்கள் தங்களுடைய கல்லூரியில் முதலாமாண்டு படிக்கும்போதே 10th மற்றும் +2 தேர்வுகளை எழுத இயலும். மேலும், SSC தேர்வாணையமும் 10th level, +2 தேர்வுகள் நடத்துவதால், முதலாமாண்டு படிக்கும் மாணவனால் குறைந்தபட்சம் ஆண்டுஒன்றுக்கு ஒரே பாடத்திட்டத்தைப் பயின்று, ஒவ்வோர் ஆண்டும் தேர்வாணையம் நடத்தும் 5-8 தேர்வுகளை எழுத இயலும். அப்படி ஒரு மாணவன் அனைத்துத் தேர்வுகளையும் எழுதுவான் எனில், அவனால் கல்லூரிப் படிப்பு முடிவதற்குள் 15-20 தேர்வுகளை எழுதி மிகப்பெரிய அனுபவத்தைப் பெற இயலும். அவனால் கல்லூரிப் படிப்பிற்குப் பின்பு நடக்கும் தேர்வுகளை எளிதாக வெல்ல இயலும்.

- உங்களுக்குத் தெரியுமா? தேர்வில் வென்றாலும் தமிழ்நாட்டிலேயே பணியாற்றலாம். ஒன்றிய அரசுப் பணித் தேர்வுகளில் தமிழக மாணவர்கள் போதிய ஆர்வம் செலுத்தாததற்கு மற்றுமொரு காரணம் தேர்வுகளில் வென்றால் தமிழ்நாட்டை விட்டு மற்ற மாநிலங்களில் வேலை செய்யக்கூடும் என்ற தவறான கருத்து உள்ளது. அதனாலேயே SSC போன்ற தேர்வுகள் இந்தியா முழுவதும் எழுதுபவர்களின் எண்ணிக்கை 10-12 லட்சம் பேர். இதுவே, SSC போன்ற தேர்வுகள் தமிழ்நாட்டில் எழுதுபவர்களின் எண்ணிக்கை 20-22 ஆயிரம் பேர். முதலில் இந்த மனநிலையை மாற்ற வேண்டும். தேர்வுகளில் வெற்றிபெற்றால் ஒரு சில துறைகளைத் தவிர பல துறைகள் தமிழ்நாட்டிலேயே வேலை செய்ய இயலும்.
- ஆகையால் SSC தேர்வில் வெற்றி பெற்றால் சொந்த மாநிலத்திலேயே வேலைக்குச் செல்ல முடியும் என்பதைனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

## தமிழ்நாடு அரசின் முன்னெடுப்புகள்


- மாண்புமிகு தமிழக முதல்வர் 2018இல் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது தமிழகத்தில் ஒன்றிய அரசுப் பணித் தேர்வுகளில் தேர்ச்சி விகிதம் குறைவாக உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி உள்ளார். அதைப்பற்றிய செய்தி Deccan Chronicle நாளேட்டில் வந்துள்ளது. அதனைச் சரிசெய்யும் பொருட்டு நான் முதல்வன் என்ற திட்டத்தின்கீழ் தமிழக அரசுத் தொலைக்காட்சியான, Kalvi TVஇல் SSC – RRB என்று போட்டித் தேர்வுகள் பிரத்யேகமான வகுப்புகள் நடந்து வருகின்றன. மேலும், "Tn – Carrier Service Employment" அந்த வகுப்புகளை You Tube Channel வழியாகவும் காணலாம். இவை கல்வி டிவியில் காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை ஒளிபரப்பாகின்றன. பின்னர், மாலையில் 7.00 மணி முதல் 9.00 மணி வரை மறுஒளிபரப்பு செய்யப்படுகின்றன.
- SSC, RRB தேர்வுகளுக்குப் பெரிதும் பயன்படும் R.S. அகர்வால் எழுதி, சந்த் நிறுவனம் வெளியிட்ட Reasoning, General Arithmetics நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் கூட்டு வெளியீடாக விரைவில் வெளியாக உள்ளன.

## வங்கித் தேர்வுகள்

- ஒவ்வொரு ஆண்டும், இந்தியா முழுவதும், ரிசர்வ் வங்கி (RBI), , பல்வேறு அரசுப் பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள் மற்றும் வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம் (IBPS) மூலம் பல வங்கித் தேர்வுகள், பல்வேறு மாதங்களில், வருடம் முழுவதும் நடைபெற்று வருகின்றன.
- ஆண்டுதோறும் இந்திய வங்கித் துறையில் பல ஆயிரம் காலிப் பணியிடங்கள் மூலம் கிரேடு பி ஆபிசேர் (Grade B Officer), , ப்ரொபஷனரி ஆபிசர் (PO),. கிளெர்க் (Clerk), , வங்கி உதவியாளர் (Assistant) போன்ற எண்ணற்ற பதவிகள் தேர்வுகள் மூலம் நிரப்பப்பட்டு வருவதால், வங்கிப் போட்டித் தேர்வுகள், மாணவர்களுக்கு நிரந்தர வங்கித் துறை வேலையைப் பெறுவதற்கான ஒரு சிறந்த வழியாக விளங்குகின்றன. IBPS PO, IBPS Clerk, IBPS RRB PO, IBPS RRB Clerk, SBI PO, RBI Grade B, RBI Assistant மற்றும் SBI SO போன்ற பல்வேறு வங்கிப் பணிகளுக்கான காலிப் பணியிடங்களை வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம் அறிவித்து, அடுத்தடுத்து தேர்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

## வங்கித் துறை போட்டித் தேர்வுகள்

- ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு தேர்வுகள் மூலம் இந்திய வங்கித் துறையில் அரசுப் பொதுத்துறை வங்கிகளில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன.
- இத்தேர்வுகளில் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா (State Bank of India) நடத்தும் SBI PO, SBI Clerk மற்றும் SBI SO தேர்வுகள், வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS) நடத்தும் IBPS PO, IBPS Clerk, IBPS SO, IBPS RRB PO மற்றும் IBPS RRB Cleark தேர்வுகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) நடத்தும் RBI Grade B மற்றும் RBI Assistant ஆகிய தேர்வுகள் மாணவர்களால் ஒவ்வொரு ஆண்டும் மிகவும் எதிர்பார்க்கப்படுகின்றன.
- பொதுத்துறை வங்கிகளில் Probationary Officers (PO) பணியிடங்களை நிரப்புவதற்கான தேர்வுகளில் முறையே முதல்நிலைத் தேர்வு (Prelims), பிரதான தேர்வு (Mains) மற்றும் நேர்காணல் (Interview) என மூன்று தேர்வு செயல்முறைகளைக் கொண்டிருக்கும்.
- கிளார்க் பணிகளுக்கான தேர்வு செயல்முறையில் முதல்நிலைத் தேர்வு (Prelims) மற்றும் பிரதான தேர்வு (Mains) மட்டுமே இருக்கும். நேர்முகத் தேர்வு கிடையாது.
- ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய இரண்டு மொழிகளில் மட்டுமே பொதுத்துறை வங்கிகளுக்கான PO மற்றும் கிளார்க் போட்டித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன.
- பிராந்திய ஊரக வங்கிகளுக்கான (Regional Rural Banks) அலுவலக உதவியாளர் (RRB Clerk) மற்றும் அலுவலர் நிலை 1 ஆகிய பணிகளுக்கான தேர்வுகளை ஆங்கிலம், இந்தி மற்றும் 13 இந்திய பிராந்திய மொழிகளில் (அஸ்ஸாமி, பெங்காலி, குஜராத்தி, கன்னடம், கொங்கனி, மலையாளம், மணிப்பூரி, மராத்தி, ஒடியா, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு மற்றும் உருது) நடத்தப்படுகிறது.



## வங்கித் தேர்வுகளுக்கான கல்வித் தகுதி

- வங்கித் தேர்வுகளை எழுத விரும்பு மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு பிரிவில் பட்டதாரியாக இருந்தால் மட்டுமே ப்ரொபேஷனரி ஆபிசர், கிளார்க் முதலிய வங்கித் தேர்வுகளை எழுதலாம்.
- பட்டப்படிப்பில் மாணவர்கள் குறிப்பிட்ட மதிப்பெண்களைப் பெற்றிருக்க வேண்டும். Specialist Officer போன்ற பணியிடங்களுக்கு, அந்தந்தப் பிரிவுகளில் பட்டப்படிப்பு அல்லது முதுநிலை படிப்புகளைப் படித்திருக்க வேண்டும்.
- இதுதவிர, வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS) நடத்தும் பிராந்திய ஊரக வங்கிகளுக்கான (IBPS RRB) தேர்வுகளில், மாணவர்களுக்கு அவர்கள் தேர்வு எழுதும் மாநிலத்தின் அல்லது யூனியன் பிரதேசத்தின் உள்ளூர் மொழி பற்றிய நல்ல அறிவு இருக்க வேண்டும். அதாவது அந்த மொழியில் பேசவும், எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

## வங்கித் தேர்வுகளுக்கான வயது வரம்பு

- வங்கித் தேர்வுகளுக்குப் பொதுவாகப் பதவிகளுக்கு ஏற்றாற் போல வயது வரம்பு அதிகார பூர்வ அறிவிப்பாணையில் வெளியிடப்பட்டிருக்கும்.
- ப்ரொபஷனரி ஆபிசர் பதவிக்கு 20 முதல் 30 வயது வரை உள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். அது போல கிளார்க் பதவிக்கு வயது 20 முதல் 28 வயது வரை உள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். வயது வரம்பில், ஓபிசி பிரிவினருக்கு மூன்று ஆண்டுகளும், எஸ்சி/எஸ்டி பிரிவினருக்கு ஐந்து ஆண்டுகளும், ஊனமுற்றோருக்குப் பத்து ஆண்டுகளும் தளர்வு அளிக்கப்படும்.
- இதுதவிர, முன்னாள் இந்திய ராணுவத்தினர் மற்றும் விதவைகள் போன்றோருக்கு வயது வரம்பில் விலக்கு உண்டு. தேர்வுகளுக்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பாணையை மாணவர்கள் பார்த்து வயது வரம்பு குறித்து அறிந்துகொள்ளலாம்.

# TNPSC தேர்வுகள்

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகள் குறித்த விவரம்

- TNPSC என்று அழைக்கப்படுகிற தமிழ் நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் வாயிலாக வருடந்தோறும் பல ஆயிரக்கணக்கான தேர்வர்கள் பல்வேறு அரசுப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்படுகிறார்கள்.
- இட ஒதுக்கீடு விவரம்

**BC**- 26.5% **BCM**-3.5% **MBC**-20% **SC**-15% **SCA**-3% **ST**-1% . ஒவ்வொரு பிரிவிலும் பெண்களுக்கு 30% தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு 20% மாற்றுத் திறனாளிகளுக்கு 4% உள் ஒதுக்கீடு உண்டு.

- தற்போது அரசு வேலைகளில் தேர்ந்தெடுக்கப்படும் பெண்களின் விழுக்காடு மட்டும் குறைந்தபட்சம் 60%.

# TNPSC நடத்தும்
# பல்வேறு முக்கியத்தேர்வுகளைப் பார்ப்போம்

## GROUP -1 EXAM - தொகுதி 1 பதவிகள்

1. துணை ஆட்சியர்




2. மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர்
3. வணிகவரித்துறை துணை அதிகாரி



4. மாவட்ட வேலைவாய்ப்பு அதிகாரி
5. மாவட்ட கூட்டுறவுத் துறை அதிகாரி
6. மாவட்ட தீயணைப்பு மற்றும் பாதுகாப்புத் துறை



7. மாவட்ட வனக்காப்பாளர் (தொகுதி 1)





## வயது வரம்பு

1. OC 21 முதல் 32 வரை
2. BC, MBC, SC, ST, SCA, BCM 21 முதல் 39 வரை

## கல்வித் தகுதி

1. ஏதேனும் ஒரு பட்டப் படிப்பில் தேர்ச்சி போதுமானது
2. இறுதி ஆண்டு படிக்கும் மாணவ மாணவிகள் முதல் நிலைத்தேர்வில் கலந்து கொள்ளலாம்.

## வினாத்தாள் அமைப்பு

1. 175 கொள்குறிவகை வினாக்கள் இடம் பெறும்
2. 25 வினாக்கள் தர்க்கவியல் மற்றும் அடிப்படை கணிதத்தில் இருந்து இடம் பெறும்

## தேர்வு முறை

### முதல் நிலைத் தேர்வு (கொள்குறிவகை)

1. முதன்மைத் தேர்வு (எழுத்துத் தேர்வு) மூன்று தாள்கள் அடங்கியது.
   3 x 250 = 750 மதிப்பெண்கள்.
2. தமிழ் தகுதித்தேர்வில் 40 மதிப்பெண்கள் கட்டாயம் எடுக்க வேண்டும்.
3. நேர்முகத் தேர்வு 40 மதிப்பெண்கள்.

# TNPSC GROUP – 2- 2A EXAM

**பதவிகள்:**

1. நகராட்சி ஆணையாளர்
2. துணை சார்பதிவாளர்
3. உதவித் தொழிலாளர் நலத்துறை அதிகாரி
4. வருவாய் ஆய்வாளர்
5. கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர்
6. கூடுதல் காவல்துறை சிறப்பு அதிகாரி போன்ற நேர்முகத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகளுக்காக நடத்தப்படுகிறது.

## வயது வரம்பு

BC, MBC, BCM, SC, SCA, ST தேர்வர்களுக்குப் பொதுவாக வயது வரம்பு இல்லை.

## கல்வித் தகுதி

ஏதேனும் ஒரு பட்டப் படிப்பில் தேர்ச்சி.

## வினாத்தாள் அமைப்பு

200 கொள்குறி வகை வினாக்கள்

1. 100 வினாக்கள் பொதுத்தமிழ்/பொது ஆங்கிலம்
2. 25 வினாக்கள் அடிப்படை கணிதம்
3. 75 வினாக்கள் பொது அறிவு பட்டப் படிப்பு தரத்தில் இடம் பெறும்

## முதல் நிலைத் தேர்வு

1. முதன்மைத் தேர்வு (எழுத்துத் தேர்வு ஒரு தாள் மட்டும் 300 மதிப்பெண்கள் 3 மணி நேரத்தேர்வு)
2. தமிழ் தகுதித் தேர்வில் 40 மதிப்பெண்கள் கட்டாயம் எடுக்க வேண்டும்.
3. நேர்முகத் தேர்வு 40 மதிப்பெண்கள்.

**பதவிகள்:**

TNPSC GROUP VIII & GROUP VII – B

தமிழ் நாடு இந்து சமய அற நிலையக் கோவில்களில் நிர்வாக அதிகாரி

## வயது வரம்பு

25 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும்

## கல்வித் தகுதி

ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு

கண்டிப்பாக இந்து சமயத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.

## வினாத்தாள் அமைப்பு

1. தாள் 1 பொதுத்தமிழ் மற்றும் கணிதம் 200 வினாக்கள் (கொள்குறி வகை)
2. தாள் 2 சைவம், வைணவம் தொடர்பானவை 200 வினாக்கள் (கொள்குறி வகை)

## GROUP - IV

**பதவிகள்:**

1. இளநிலை உதவியாளர்
2. கிராம நிர்வாக அலுவலர்

### வயது வரம்பு

BC, MBC, BCM, SC, SCA, ST தேர்வர்களுக்குப் பொதுவாக வயது வரம்பு இல்லை.

### கல்வித் தகுதி

பத்தாம் வகுப்பு

### வினாத்தாள் அமைப்பு

1. 100 பொதுத்தமிழ் வினாக்கள்
2. 25 அடிப்படை கணித வினாக்கள்
3. 75 பொது அறிவு வினாக்கள்

இவைகளைத் தவிர இன்னும் பல்வேறு துறைசார்ந்த தேர்வுகளும் உள்ளன.
விவரங்களுக்கு www.tnpsc.gov.in என்ற வலைத்தளத்தைப் பார்க்கவும்.
பாடத்திட்டம், முந்தைய வருடங்களில் கேட்கப்பட்ட கேள்விகள் இவற்றை ஆராய்ந்து, தினசரி, தொடர்ச்சியாகக் கற்றால் எந்தப் போட்டித்தேர்விலும் வெற்றி பெறலாம்.




போட்டி மாணவர்களுக்குத் தேவையான வினாத்தாள்கள், பாடம் தொடர்பான குறிப்புகள் போன்றவை கட்டணம் ஏதுமின்றி இந்தத் தளத்தில் கிடைக்கும் :
www.tamilnaducareerservices.tn.gov.in

நான் முதல்வன்

உலகை வெல்லும் இளைய தமிழகம்





"படிக்காமல் சாதித்த ஒருவரை யாராவது எடுத்துக்காட்டாகக் காட்டினால், படித்து சாதித்த லட்சம் பேரை நாம் காட்ட முடியும். படிக்காமல் சாதிக்கலாம் என்று யாராவது சொன்னால், அது தன்னம்பிக்கை ஊட்டுவதல்ல; வெறும் ஆசை வார்த்தை. இவர்களெல்லாம் படித்து முன்னேறுகிறார்களே என்ற எரிச்சலில் தவறான பாதையைக் காட்டும் சூழ்ச்சி அது"

- மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு முதலமைச்சர்

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா? பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா? தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா? ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்) குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா? மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா? பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா? **அழையுங்கள் 1098** உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

**14417**

**கல்வித் தகவல்**

**நேரடி உயர்கல்வி ஆலோசனைக்கு உதவி எண்.14417ஐ அழைக்கவும்**